Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 346
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஐப்பசி 29 ஷஃபான் 12 புதன்கிழமை [15-11-67]

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
ரப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா
பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# அரசாங்கத்துக்கு அவகாசம்; அதன்பின் வெளியேற்றம்

## தமிழரசு வாலிபமுன்னணி தெரிவிக்கும் யோசனை

யாழ்ப்பாணம், புதன்

மாவட்டசபை மசோதா, தமிழ்பல்கலைக்கழகம், தமிழ் மொழிச்சட்ட அமுல், வடபகுதியிலிருந்து விஞ்ஞான ஆசிரியர் இடமாற்றம், கிழக்கு மாகாணத்தில் சிங்களக்குடியேற்றம், மாட்டின் கமிஷன் அறிக்கை ஆகிய தமிழரசுக்கட்சியின் முக்கிய கோரிக்கைகளை பொறுத்த வரைபிரதமர் ஒருதிகதிக்குள் குறிப்பிட்டு அத்திகதிக்குள் நிறைவேற்றப்படவேண்டும் அவ்வண்ணம் செய்யத் தவறும் பட்சத்தில், தமிழரசுக் கட்சி தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை ஆரம்பமான தமிழரசுக்கட்சி வாலிப முன்னணி கூட்டத்தில் மேற்கண்ட ஒரு முக்கிய தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

வாலிபமுன்னணி கூட்டத்தில், தமிழ் மக்களை எதிர்நோக்கியுள்ள பல பிரச்னைகள்பற்றி அலசி ஆராயப்பட்டன. கூட்டத்தில் கலந்துகொண்ட ஒவ்வொருவரும் தங்கள் கருத்தை எடுத்துக்கூறினார்கள்.

காங்கேசன்துறை துறைமுக விரிவுத்தி, தீண்டாமைஒழிப்பு, யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தல் ஆகிய விஷயங்கள்பற்றியும் பேசப்பட்டதாகத் தெரிகிறது.

மாட்டின் கமிஷன் அறிக்கையை அமுல நடத்த வேண்டுமென்றும், மாநகரசபை தேர்தலுக்கு முன நவீன மார்க்கடுக்கான வேலைகள் யாவற்றையும் முடித்துவிடவேண்டுமென்றும் ஒரு சாரார் கருத்துத் தெரிவித்தார்களாம்.

பலவேறு கிளைகளிலிருந்தும் சுமார் 15பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரேரணையாக விவாதத்திற்கு எடுக்கப்பட்டது. இக்கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் இன்று நடைபெறும் பொதுச்சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

தமிழரசுக்கட்சித் தலைமை காரியாலயத்தின் உள்ளே பரபரப்பான சூழ்நிலையில், வாலிப முன்னணி கூட்டம் நடந்துகொண்டிருந்தபொழுது, வெளியிலும் பலர் திரண்டிருந்தனர்.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. கூட்டம்தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

## ஒழுங்கையில் கிடந்த 127 பட்டுச் சேலைகள்

வல்வெட்டித்துறை, செவ்.

வல்வெட்டித்துறைபொலிசாருக்கு கிடைத்த இரகசியத்தகவலைத் தொடர்ந்து இன்ஸ்பெக்டர் திரு. சி. எல், விஜயதிலகா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியொன்று வல்வெட்டித்துறை — காங்கேசன்துறை வீதியிலுள்ள ஒரு ஒழுங்கையில் 127 உயர்ந்தரக பட்டுசேலைகள்கொண்ட மூடையொன்று இருக்கக் கண்டுபிடித்தனர்.

இச் சேலைகள் யாவும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவையெனப் பொலிசார் சந்தேகிக்கின்றனர். இம் மூடை அவ்விடத்தில் எவ்விதம் வந்து சேர்ந்தனவென்று சந்தேகம்கொண்ட பொலிசார் அவ்வொழுங்கையிலுள்ள சில வீடுகளை இராணுவத்தினரின் உதவிகொண்டு சோதனையிட்டனர். சேலைகள் சுங்கப் பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

## உதவிமந்திரி வாபஸ் பெற்றார்

கொழும்பு, செவ்.

முடிக்குரிய காணிக்கு விண்ணப்பம் செய்திருந்த எம். பி.க்களில் ஒருவரான உதவி நிதி மந்திரி திரு. என். எல். விமலசேனா தமது விண்ணப்பத்தை வாபஸ் பெற்றுக் கொண்டார்.

அரசாங்கத்தின் உணவு உற்பத்தி அதிகரிப்பு நோக்கத்துக்குத் தாங்களும் தம்மாலான கடமையைச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடனேயே தாம் முடிக்குரிய காணிக்கு விண்ணப்பித்ததாகவும் இதே நோக்கத்துடன் தான் இதர எம். பிக்களும் செய்திருக்கலாமென்றும் திரு. விமலசேனா தெரிவித்துள்ளார். நல்ல நோக்கத்துக்குத் தியகருத்துத் தெரிவிக்கும் பழக்கம் இந்நாட்டிலிருப்பது வருந்தத் தக்கதென்றும் கூறும் திரு விமலசேனா கணிசோரும் தமது விண்ணப்பத்தை வாபஸ் பெற மனுச் செய்துள்ளார்.

## யாழ்ப்பாணத்தில் 300; மட்டக்களப்பில் 60

### ஆசிரியர் இடமாற்றம்

கொம்பனித்தெரு, செவ்வாய்

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 300க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் அடுத்த வருடம் ஜனவரிமாதத்தில் இடமாற்றம் செய்யப்படவிருக்கிறார்கள்.

மட்டக்களப்பில் கடமையாற்றும் 60க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் அடுத்த வருடத்தில் இடமாற்றம் செய்யப்படவிருக்கிறார்கள்.

இரு பகுதிகளிலுமிருந்து இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்களில் அநேகமானோர் விஞ்ஞான ஆசிரியர்களெனத் தெரியவருகிறது.

வடக்கு-கிழக்குமாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களிலுள்ள ஆசிரியர்களுக்கான இடமாற்ற உத்தரவுகள் இம்மாத இறுதிக்குள் அனுப்பிவைக்கப்படவிருப்பதாகத்தெரியவருகிறது.

1. யானை மார்க் நம்பர் 1 சீமென்ஸ்
ஒடிகொலோன் சிசு பரிபாலிப்புக்கும், நோயாளிகள் அறைக்கும், குளிக்கும் அறைக்கும்.
மறவாதீர்—சீமென்ஸ்.

2. சீமென்ஸ்— வாசனை செவ்விளநீர் தேங்காயெண்ணையும் ஆமணக்கெண்ணை கூந்தல் வளர்ச்சி தைலமும் உங்கள் உரோமத்தை செழிப்பாகவும் சிறப்பாகவும் வளர்க்கும்.

3. சீமென்ஸ் புத்தராஜா தைலம்
தலையிடியை ஒரு நிமிடத்தில் நிறுத்திவிடும். எல்லாவிதமான தலையிடிகளுக்கும் பீநீசம் சம்பந்தமான சகல நோய்களுக்கும் சிறந்த ஔஷதம்.

இலங்கையிலுள்ள சகல பிரசித்திபெற்ற வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

சீமென்ஸ் பற்பொடி: தினமும் சீமென்ஸ் பற்பொடியால் உங்கள் பற்களை துலக்குங்கள். பல் சூத்தை முதலிய எல்லா பல், வாய் நோய்களையும் குணப்படுத்தும் ஓர் ஆயுர்வேத தயாரிப்பு. நல்ல பற்களில் சூத்தை தொற்றுதபடி அவற்றை பாதுகாத்து இறுகப்பண்ணும். பற்களை வெண்மையாக்கும். நச்சுக் கலப்பில்லாதது.

ஒரு பாக்கெட் 60 சதம்,

வந்தபின் காப்பதிலும் வருமுன் காத்தல் நன்று
இதுதான் நிவாரணம்:
சீமென்ஸ் கடுக்காய் குளிகைகள்

இவற்றில் ஒரு பாக்கெட்டை வைத்துக்கொண்டு வயிற்றுக்குழப்பம், தலைவலி வரும்போது உபயோகிக்கவும். ஒரு பாக்கட் ரூ. 1/20, தபால் செலவு 60 சதம்.

சீமென்ஸ் ஒடிகொலோன்
1 அவுன்ஸ் போத்தல் ரூ. 1-25
2 அவுன்ஸ் போத்தல் ரூ. 2-25
சீமென்ஸ் ஆமணக்கெண்ணை கூந்தல் தைலம்
4 அவுன்ஸ் போத்தல் ரூ. 2-00
8 அவுன்ஸ் போத்தல் ரூ. 3-50
சீமென்ஸ் செவ்விளநீர் தேங்காயெண்ணை கூந்தல் தைலம்
4 அவுன்ஸ் போத்தல் ரூ. 1-10
8 அவுன்ஸ் போத்தல் ரூ. 2-00
சீமென்ஸ் பற்பொடி
1 பாக்கெட் -/60 சதம்
சீமென்ஸ கடுக்காய் குளிகைகள்
100 குளிகை போத்தல் ரூ. 3-50
250 குளிகை போத்தல் ரூ. 8-50
500 குளிகை போத்தல் ரூ. 15-00
சீமென்ஸ புத்தராஜ தைலம்
1 அவுன்ஸ் போத்தல் ரூ. 1 35
6 அவுன்ஸ் போத்தல் ரூ. 3-25
வியாபாரிகளுக்கு விசேஷ சலுகைகள்

சீமென் பிரதர்ஸ்,
234, 5-ம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு—11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சமய சேவை ஸ்தாபனத்தினரால் பாவிக்கப்பெற்றதும் புதிய எஞ்சின், ரயர், பற்றறிகளுடன் கூடியதுமான BL 7000 சீரிஸ் "பொக்ஸ் வாகன்" (பசஞ்சர்) வான் ஒன்று நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: வே. செல்வநாயகம், விவேகானந்த அச்சகம், யாழ்ப்பாணம். 2129

## கிளிநொச்சியில் ஐ.நா.தினம்

கிளிநொச்சி, செவ்.

கிளிநொச்சிப் பகுதியில் சர்வதேச சிறுவர்விழாவும் ஐக்கியநாடுகள்தினவிழாவும் கொண்டாடப்பட்டது, கரைச்சிப்பிரிவுக் காரியாதிகாரி விழாவுக்கான ஒழுங்குகளைச்செய்திருந்தார். விழாவில் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா.பொ. இரத்தினம் கலந்துகொண்டு உரையாற்றினார்.

## இந்த வகுப்புக்களுக்கு பொதுப் பரீட்சை

சுழிபுரம், செவ்வாய்.

வட்டுக்கோட்டைத்தொகுதியின் வட்டாரப் பரிசோதகர் திரு. எஸ். சபாபதி வட்டுக்கோட்டை வட்டாரத்திலுள்ள சகல பாடசாலைகளிலுமுள்ள மூன்று, நாலு, ஆறு, ஏழு ஆகிய வகுப்புக்களுக்கு ஒரு பொதுப் பரீட்சையை நடாத்த ஒழுங்குகள் செய்துள்ளார். பரீட்சை இம்மாதம் 25, 26, 27ம் திகதிகளில் நடைபெறும்,

## வீமன்காமம் ஆங்கில பாடசாலை தரம் உயர்வு

அளவெட்டி, செவ்.

வீமன்காமம் ஆங்கில பாடசாலை தரம் உயர்த்தப்படவிருக்கிறது.

இக்கிராம மாணவர்களின் வசதியை முன்னிட்டு வீமன்காமம் ஆங்கில பாடசாலைப்பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர் கல்வி அதிபரையும் காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தையும் கேட்டுக்கொண்டதற் கிணங்கவே அடுத்தவருடத்திலிருந்து இப்பாடசாலை தரம் உயர்த்தப்படவிருக்கிறது.

முதலாம் வகுப்பிலிருந்து பதினொராம் வகுப்புவரை இயங்கிவரும் இப்பாடசாலை அடுத்தவருடத்திலிருந்து 12-ம் வகுப்புவரை தரம் உயர்த்தப்படவிருக்கிறது.

இதுபற்றி வடபகுதி வித்தியாதிபதி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் மேற்படி பாடசாலைக்கு அறிவித்துள்ளார்.

## இம்மாத இறுதியில் ஜி. சி. ஈ. முடிவுகள்

கொம்பனித்தெரு, செவ்.

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜீ. சி. ஈ. சாதாரண பரீட்சையின் பெறு பேறுகள் இம்மாதக் கடைசிக்குள் பாடசாலைகள் மூலம் பரீட்சை எடுத்தவர்களுக்கு பாடசாலைகளுக்கும், தனிப்பட்ட முறையில் பரீட்சை எடுத்தவர்களுக்கு தனிப்பட்ட முறையிலும் அனுப்பி வைக்கப்படும் என்று பரீட்சைப் பகுதி அதிகாரி ஒருவர் கூறினார்.

## பருத்தித்துறையில் நாய்கள் தொல்லை

புலோலி, செவ்வாய்

பருத்தித்துறையில் நாய்கள் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சென்ற மாதம் 15க்கு மேற்பட்டோரை நாய்கள் கடித்துள்ளன. நகரமத்தியிலும், கிராமத்துக்குள்ளும் விசர் நாய்கள் நடமாடுவதால் குழந்தைகளும், பெரியோர்களும் வெளியே நடமாடப் பயப்படுகின்றனர்.

## ஏற்பு வலியால் இளைஞன் மரணம்

புலோலி, செவ்

புலோலி வடக்கு காரையடியைச் சேர்ந்த கந்தையா பாலகிருஷ்ணன் என்ற 18 வயது மாணவன் ஏற்புவலி காரணமாக மந்திகை ஆஸ்பத்திரியில் மரணமானார். இறந்தவரது தாய் சாட்சியமளிக்கையில், இறந்த தமது மகனுக்குத் தொண்டையில் நோவுகாரணமாக ஒருதனிப்பட்ட டாக்டரிடம் சிகிச்சை பெற்று வந்ததாகவும், பின்னர் அந்த டாக்டர் அவரை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறக்கடிதம் கொடுத்ததாகவும், மந்திகை ஆஸ்பத்திரியில் அவர் சேர்க்கப் பட்டு அடுத்த நாள் அதிகாலை தமது மகன் இறந்து விட்டதாக அறிந்ததாகவும் சொன்னார்.

இறந்தவரின் வலதுகாதில் சீழ்வடிந்ததாகவும், வலது ஈரல் பழுதடைந் திருந்ததாகவும், ஏற்புவலி காரணமாகவே அவர் இறந்தாரென்றும் பிரேதபரிசோதனை செய்த டாக்டர் சீனியப்பா ரகுநாதன் கூறினார். மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தார்.

## கோப்பாய் நாவலர் பாடசாலை

கோப்பாய், செவ்.

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கான புதிய கட்டட வேலைகள் யாவும் பூர்த்தியடையும் நிலையிலுள்ளன. இக்கட்டிடத்தின் திறப்பு விழா அடுத்த மாத முற்பகுதியில் நடைபெறுமெனத் தெரிகிறது.

## வடபகுதி தீன் புகையிலை செய்கையாளருக்கு புதுவசதி

### மலையாளம்புகையிலைச்சங்கம்ஏற்பாடு

புலோலி, செவ்வாய்

வடபகுதி மலையாளப் புகையிலைக் கூட்டுறவு விற்பனைச் சங்கம், வடபகுதி தீன் புகையிலைப்பயிர்ச் செய்கையாளருக்கு ஓர் அரிய வாய்ப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

அடையாள புகையிலைக் குத்தக்க விலை வரும்வரை சங்கம் அதனை ஈடாக வைத்துக்கொண்டுகடன் வழங்குவதாகத் தீர்மானித்திருப்பதே இவ்வாய்ப்பாகும்.

இம்முறையின்படி புகையிலையின் பெறுமதியில் 50 வீதம் கடனாகக் கொடுக்கப்படுமென்றும் புகையிலை அறுவடை செய்யப்படும் காலங்களில்விவசாயிகளுக்கு ஏற்படும் கஷ்டத்தைப் போக்க இத்திட்டம் பெரிதும் உதவியாயிருக்குமெனவும் தெரிகிறது. அடுத்த ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் இவ்வசதிகளை மேற்கொள்ளச் சங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

## வ. ஆ. சங்க பரீட்சை

இமையாணன், செவ்.

வடமாகாண ஆசிரிய சங்கத்தினரால் 8ம் வகுப்பு மாணவர்களுக்கென நடத்தப்படும் பரீட்சை இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

## 50 மாணவர்களை பிடுங்கினர்

புன்னாலைக்கட்டுவன், செவ்.

உரும்பராய் இந்துக் கல்லூரியிலும், உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலையிலும், உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையிலும் பயிலும் ஐந்நூறுக்கு மேற்பட்ட மாணவ மாணவியர் நேற்று சிறுப்பிட்டிப் பகுதியிலுள்ள நெல்வயல்களில் களை பிடுங்கினர்,

12 வயதுக்கு மேற்பட்ட சகல மாணவ மாணவியரும் தொடர்ந்து இம்மாதம் 17-ம் திகதிவரை களைபிடுங்குவதில் ஈடுபடுவர்.

## புலோலிக்கு விரைவில மின்சாரம்

புலோலி, செவ்.

புலோலிகிராமசபை எல்லைக்குள் மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது சம்பந்தமாக புலோலி கிராமசபை உப தலைவர் திரு. க. வேலுப்பிள்ளை சுன்னாகம் மின்சார நிலைய உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டுள்ளார். அடுத்த ஆண்டு தை மாதம் அநேகமாக புலோலி பகுதிக்கு மின்சாரம் கிடைக்குமென நம்பப்படுகிறது.


## இப்பொழுது நடைபெறுகிறது

**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]

தினசரி பி.ப. 2-30, மாலை -20, இரவு 9-30 மணிக்கு

**பிளாஸா** [வெள்ளவத்தை] **கெப்பிட்டல்** [கொழும்பு]

**மைலன்** [கொட்டாஞ்சேனை]

**விஜயா** [மட்டுநகர்] **ஸ்ரீகிருஷ்ணா** [திருமலை]

மற்றும் நாலு திரைகளில்

**எம். ஜி. ஆரும், ஜெமினி கணேசனும்**

முதல்முறையாக சேர்ந்து நடித்து வெற்றி கண்ட இன்பச் சித்திரம்!

கடமைக்கும் பாசத்திற்கும் நடுவே சிக்கித்தவிக்கும் ஒரு பொலிஸ் அதிகாரியின் உணர்ச்சியூட்டும் சித்திரம்! 100 நாட்களுக்கு மேல் ஓடி தென்னகத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களின் பாராட்டைப் பெற்ற சித்திரம்.

மற்றும்



ஜெயலலிதா, ஜெயந்தி

நம்பியார், அசோகன்,

நாகேஷ், ஸ்ரீராம்,

மனோரமா,

பி. கே. சரஸ்வதி

நடித்த

தேவர் பிலிம்ஸ்

# முகராசி

டைரக்ஷன் எம். ஏ. திருமுகம்

இசை: திரை இசைத்திலகம் கே. வி. மகாதேவன்

6-வது வாரம்

**கிங்ஸ்லி** [கொட்டாஞ்சேனை] **லக்ஷ்மி** [கரவெட்டி]

ஜெய்சங்கர் — ஜமுனா — நாகேஷ் — பேபி பத்மினி

நடித்த

ஏ. வி. எம்மின் ஜனாதிபதி பரிசுபெற்ற

குழந்தையும் தெய்வமும்

**மனோகரா**

யாழ்ப்பாணம்

Daily at 2-30, 6-30, & 9-45 Pm

Pre Poya & Poya 10-30 a m

தேவானந், சைராபானு, சசிகலா நடித்த

**பியார் மொஹபத்**

**PYAR MOHABBAT**

ஹிந்தி (ஈஸ்ட்மன் கலர்)

இசை-சங்கர், ஜெயகிஷர்

**நியூ காலிங்கன்**

[இணுவில்]

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறைதினங்களில் 2-30

ஜெமினி-அஞ்சலிதேவி

நடித்த

**கணவனே**

**கண்கண்ட தெய்வம்**

**REGAL JAFFNA**

Daily at

4-40, 7-00 & 9-45 p. m.

Audie Murphy

Darren McGavin

in

**BULLET FORA MAN**


## யாழ்ப்பாண மாநகரசபை

### ஏல விற்பனை

இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் பகிரங்க ஏல விற்பனை மூலம் 22-11-67-ம் திகதி புதன்கிழமை மு. ப. 10 மணியளவில் மின்சார பொருட்களஞ்சியத்தில் விற்கப்படுமென இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

1. தேக்கு மரத்துண்டு—
   3 1/2'' X 3 1/2'' X 3 1/2'' — 3 1/2 துண்டு
2. தேக்கு மரத்துண்டு—
   2 1/2'' X 2 1/2'' X 2 1/2'' — 1 1/2 துண்டு
3. ஜி. ஐ. கம்பிகள்
   இல. 8 [பழையன]— 162 இருத்தல்
4. ஜி. ஐ. கம்பிகள்
   இல. 10 [பழையன] — 171 இருத்தல்
5. செம்புக் கம்பித்துண்டுகள் — 55 இருத்தல்
6. எரிந்த செம்புக் கம்பிகள் — 835 இருத்தல்
7. தேக்குப் பலகையினாலான
   மின்மானிப் பலகைகள் [பழையன] 20

மேற்கொண்டு தகவல்களை மின்சாரப் பொருட்களஞ்சியக் காப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கட்சன் செல்வராசா
மாநகரசபை ஆணையாளர்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், 12-1167. 327

## அனுதாபச் செய்தி

பிரபல வியாபாரியும் சமூக ஊழியருமான ஜனாப் V. M. ஐதுறூஸ் அவர்கள் இறைவனடி சேர்ந்ததையிட்டு அன்னாருடைய குடும்பத்தாருக்கு யாழ். முஸ்லிம் சனசமூக நிலையத்தார் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறார்கள். அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

140


## விற்பனைக்கு

மின்சாரத்தினால் ஓட்டு வேலைகள் செய்யக் கூடிய (150 Amps) வெல்டிங் பிளாண்ட் விற்பனைக்குண்டு.

விபரங்களுக்கு: T. S. மணியம்,

சந்திரா வெல்டிங் வேக்ஸ்

105, அம்பலவாணர் வீதி,

அத்தியடி யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரபு நாடுகளுடன் நேரடிப் பேச்சுக்கு வழி செய்யாத ஐ. நா. தீர்மானம்

## இஸ்ரேல்ஏற்றுக்கொள்ளாது என்கிறார் பிரதமர் எஷ்கொல்

டெல்அவிவ், நவ.14

**அரபுநாடுகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தைகளில்இஸ்ரேல் ஈடுபடவேண்டுமென்ற ஒரு தீர்மானம், இஸ்ரேல் பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

இத்தீர்மானத்தையொட்டி பார்லிமெண்டில் பேசுகையில், அரபுநாடுகளுக்கும் இஸ்ரேலுக்குமிடையேயான நேரடிப் பேச்சுவார்த்தைகளை உதாசீனம் செய்யும் எந்த ஐ.நா.சபையின்தீர்மானத்தையும் இஸ்ரேல் ஏற்றுக்கொள்ளமாட்டாது என இஸ்ரேல் பிரதமர் திரு. எஷ்கொல் கூறினார்.

### புதிய நெருக்கடி

நேரடிப் பேச்சுவார்த்தைகளுக்கு இடமளிக்காதஎந்த தீர்மானமும், ஒரு புதிய நெருக்கடிக்கே வழிசெய்யுமெனவும் பிரதமர் எஷ்கொல் குறிப்பிட்டார்.

இஸ்ரேல் துருப்புக்கள் அரபுப் பிராந்தியங்களிலிருந்து, நிபந்தனையின்றி வாபஸ்பெறவேண்டுமெனக் கோரும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் தீர்மானத்தையிட்டு பிரதமர் எஷ்கொல் குறிப்பிடுகையில், அது யதார்த்தமற்றது எனக்கூறினார்.

### ஐ.நா.சபையில் ஜோர்தான்

இதற்கிடையில் நேற்று, ஐ. நா. பந்தோபஸ்துசபையில் பேசிய ஜோர்தான் பிரதிநிதி,மேற்கு ஆசிய விவகாரத்தில் திட்டமான நடவடிக்கை எடுக்கச்சபை பின்வாங்குவதாலேயே இஸ்ரேலின் துணிச்சல் அதிகரிப்பதாகக் கூறினார். உறுதியான நடவடிக்கையில் இறங்குமாறு அவர் சபையைக்கேட்டுக்கொண்டார்.

## காணாமற்போன 3 மலையேறிகள் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது

சிம்லா, நவ. 14

மணாலி பகுதியில் மேக்கர்பே சிகர உச்சியை அடைவதற்காக அந்தச் சிகரத்தில் கடந்த மாதம் 19,910 அடி வரை ஏறிய மூவர்காணாமற் போனார்கள் அல்லவா? இம் மூவரில் ஒருவரான ஆஸ்திரேலியரான திரு. ஹில் என்பவரின் சடலம், 16,000 அடி உயரத்தில், பனிக்கட்டியின் கீழ் புதையுண்டுகிடந்த கூடாரத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது இவர்களைத் தேடிச்சென்ற மீட்புக்கோஷ்டியொன்றே சடலத்தைக் கண்டுபிடித்தது.

மற்ற இருவரின்கதிஎன்னவெனத் தெரியவில்லை, காலநிலை மோசமாகவுள்ள காரணத்தால், மீட்பு கோஷ்டியின் தேடும் வேலை தடைப்பட்டுள்ளது.

## பிரபல இந்திய கிரிக்கெட் வீரர் சி. கே. நாயுடு காலமானார்

இந்தூர், நவ. 14

இந்தியாவின் தலைசிறந்த கிரிக்கெட் ஆட்டக்காரரில் ஒருவரான கேர்னல் சி. கே. நாயுடு, இன்று அதிகாலையில் இங்கு காலமானார்.

இந்தியாவின் உத்தியோகபூர்வமான முதலாவது 'டெஸ்ட்' பந்தயப்போட்டியில், இவரே இந்தியாவுக்கு 'காப்டனாக' இருந்தார். இங்கிலாந்துக்கெதிராக, 1932-ல், சி. கே. நாயுடு, இந்திய கோஷ்டிக்குத் தலைமைதாங்கினார்.

தமது 72-வது வயதில் மரணமாகியுள்ள இவர், கிரிக்கெட் விளையாட்டின் சகலதுறைகளிலும் சிறந்து விளங்கினார்.

## 'மே.வங்காள சட்டசபையை கவர்னர் கலைக்க முடியாது'

### முதல்வர் முக்கர்ஜி அறிவிப்பு

கல்கத்தா, நவ. 14

மேற்கு வங்காள சட்டசபையை, அடுத்த மாதம் 18-ந் திகதிக்கு முன்னர் அழைக்கும் உத்தேசம் எதுவும் தமக்கில்லை என மேற்கு வங்காள முதல் மந்திரி திரு. அஜொய் முக்கர்ஜி அறிவித்துள்ளார்.

### கவர்னர் திரும்பினார்

இதற்கிடையில், புதுடில்லிக்குச் சென்றிருந்த மேற்கு வங்காள கவர்னர் தமது விஜயத்தைப் பாதியில் முறித்துக்கொண்டு, கல்கத்தா திரும்பியுள்ளார். முன்னதாக முதல்மந்திரி திரு. முக்கர்ஜியிடம் அவர் ஒரு கடிதத்தை அளித்திருந்தார். அக்கடிதத்தின் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

### பெரும்பான்மை

சட்ட சபையில் ஆளுங் கட்சிக்கானபெரும்பான்மை பற்றி முதல் மந்திரி திரு. முக்கர்ஜியிடம் கேட்டபோது, தமது ஐக்கிய முன்னணிக்குப் போதிய பெரும்பான்மை சட்ட சபையில் இருக்கிறது என்பது பற்றி நிச்சயமில்லை என்று அவர் தெரிவித்தார். ஆனால், தமது கட்சி, சட்டசபையில் தோற்கடிக்கப்படாது என்பதில் தமக்கு நம்பிக்கை இருப்பதாக அவர் கூறினார்.

சட்ட சபை கலைக்கப்படும் சாத்தியம் பற்றி அவர் குறிப்பிடுகையில், அரசியற் சாஸன ரீதியாக ஆட்சியில் எவ்வித முறிவும் ஏற்படவில்லையாதலால், சட்ட சபையை கவர்னர் கலைக்க முடியாது என்றார்.

ம. பி.

## காங்கிரசிலிருந்து விலகிய 7 பேர் மீண்டும் சேர்ந்தனர்

கோபால், நவ. 14

மத்தியபிரதேசத்தில், காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி, ஆளும் கட்சியான சம்யுக்த தளத்துடன் சேர்ந்துவிட்டதாகக் கூறப்பட்ட 7 காங்கிரஸ் அங்கத்தவர்கள் மீண்டும் காங்கிரசில் சேர்ந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது,

### பி. எஸ். பி. வாபஸ்

மத்தியப்பிரதேச ஆளும் கட்சியான சம்யுக்த தளத்தின் இணைப்புக்கமிட்டியில் இருந்துவாபஸ்பெறுவதென பிரஜா சோஷலிஸ்ட் கட்சி தீர்மானித்துள்ளது.

ஆளும் கட்சியின் மந்திரி சபையில் பி. எஸ். பி. மந்திரி எவரும் அங்கம்வகிக்காவிட்டாலும், இதுவரை பி. எஸ். பி, ஆளும் கட்சியின் கொள்கைகளை உருவாக்கும் இணைப்புக்கமிட்டியில் அங்கத்துவம்வகித்து வந்தது.

## இறந்தவரின் இரத்தம் சேமிக்கப்படும்

மாஸ்கோ, நவ. 14

இறந்த சடலங்களிலிருந்து இரத்தம் சேமிக்கும் ரஷ்ய முறை இலங்கையிலும் பின்பற்றப்படவிருக்கிறது.ரஷ்ய வைத்திய நிபுணர் பேராசிரியர் எம். தரசோவ் கண்டுபிடித்த இந்த முறையை இலங்கையிலும் கடைப்பிடிப்பது சம்பந்தமாக அவருடன் சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜெவர்த்தனா, நிரந்தரக்காரியதரிசி திரு. சி. பாலசிங்கம், சுகாதார பதில் டைரக்டர் டாக்டர் டி. பி. குணசேகரா ஆகியோர் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

இந்தியா திரும்பும்

## இலங்கைத் தொழில் தமிழருக்கு வாய்ப்புகள்

### ராமநாதபுரம் ஜில்லாவில் 6 தொழிற்சாலைகள் நிறுவ யோசனை

மதுரை, நவ. 14

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிவரும் மக்களுக்குப் புனர் வாழ்வளிப்பதற்காக, வேலை வாய்ப்புக்களைப் பெருக்க கிழக்கு ராமநாதபுரம் ஜில்லாவில் 6 தொழிற்சாலைகள் தொடங்கத் திட்டமிடப்பட்டு வருகிறது.

மத்திய அரசின் முழு உதவியுடன் இத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.இதற்கான திட்டமொன்றை ராஜ்ய அரசாங்கத்துக்கு, ராமநாதபுரம் ஜில்லா கலெக்டர் திரு. ஏ. எஸ். வெங்கட்ராமன் அனுப்பியுள்ளார்.

### தொழிற்சாலைகள்

ராமேஸ்வரம் தீவுப் பகுதியில் கிடைக்கும் சுண்ணாம்பு படிவங்களைக் கொண்ட பெரிய சிமெந்து தொழிற்சாலையொன்றும், மானமதுரையருகே நடுத்தர சிமெந்து தொழிற்சாலையொன்றும் அமைக்க அவர் யோசனை கூறியுள்ளார்.

மண்டபத்தில் சோப்புத் தயாரிக்கும் தொழிற்சாலை மீன் பதனிடும் தொழிற்சாலை யொன்றும், நவீன கயிறு தயாரிப்பு தொழிற்சாலையும் அமைக்கலாமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை, மானமதுரை பகுதிகளில் கிடைக்கும் தாதுவத்தைக் கொண்டு மானமதுரை பகுதியில் பென்ஸில் தயாரிப்பு தொழிற்சாலை, வர்ணத் தயாரிப்பு தொழிற்சாலை, செங்கல், ஓடு தயாரிப்பு தொழிற்சாலை ஆகியவற்றை அமைக்கலாமென்றும் அவர் யோசனை கூறியுள்ளார்.

### விவசாயம்

இவை தவிர,மானமதுரை அருகே சுமார் 4100 ஏக்கர் நிலத்தில் விவசாயத் தொழிலாளருக்கு வேலையளிக்க விவசாயத் தோட்டப் பண்ணையொன்றை அமைக்கலாமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சிறியதென்வியட்னாம் கிராமத்தை வடவியட்னாமியர் கைப்பற்றினர்

சைகோன், நவ. 14

கடந்த 12 நாட்களாகத் தென் வியட்னாமில் அமெரிக்கத்துருப்புகளுக்கும் வட வியட்னாம் துருப்புகளுக்குமிடையே நடைபெற்ற கடும் சண்டையின் முடிவில் ஒரு சிறிய தென் வியட்னாம் கிராமத்தை வட வியட்னாம் துருப்புகள் கைப்பற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### பங்கர் திருப்தி

ஆனாலும், தென்வியட்னாமிலுள்ள அமெரிக்கப் பிரதிநிதி திரு. பங்கர், வியட்னாமில் அமெரிக்கர்கள் இராணுவ, அரசியல் ரீதியாகக் குறிப்பிட்ட வெற்றிகளை ஈட்டியிருப்பதாகக் கூறியுள்ளார்.

## 'குழந்தைகள் மீது அன்பு செலுத்துவதில் ஈடிணையற்றவர் நேரு'

### ராஷ்டிரபதி டாக்டர் சாகிர் ஹுசெயினின் செய்தி

புதுடில்லி, நவ. 15

காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் திரு. ஜவஹர்லால் நேருவின் 78வது பிறந்த தினம்நேற்று இந்தியாவெங்கும் கொண்டாடப்பட்டது. அத்துடன், அவரது பிறந்த தினம் குழந்தைகள் தினமாகவும் கொண்டாடப்பட்டது.

### குழந்தைப் பிரியர்

பிறந்ததினக்கொண்டாட்டத்தையொட்டி ராஷ்டிரபதி டாக்டர் சாகிர் ஹுசெயின் அனுப்பிய செய்தியில், நேருவின் இலட்சியங்களை மக்கள் கடைப்பிடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். நேருவுக்குக் குழந்தைகள்மீது இருந்த அலாதிப் பிரியம்பற்றியும் அவர்குறிப்பிட்டு, குழந்தைகள்மீது அன்பு செலுத்துவதில் நேருவுக்கு ஈடாக எவரும் கிடையாது என்றார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## 'தெ. கி. ஆசிய பாதுகாப்பு அமெரிக்காவுக்கு அவசியம்'

வாஷிங்டன், நவ. 14

அமெரிக்க உபஜனாதிபதி திரு. ஹம்ப்ரியும், வியட்னாமில் அமெரிக்காவின் சாதனை குறித்துத் திருப்தி வெளியிட்டுள்ளார். நேற்று ஒரு கூட்டத்தில் பேசுகையில், தென் கிழக்காசியா—உபஜனாதிபதி ஹம்ப்ரி—வின் பாதுகாப்பு, அமெரிக்காவின் நலன்களுக்கு இன்றியமையாதது என்று அவர் கூறினார். அத்துடன், வடவியட்னாம்மீதான குண்டு வீச்சும் அவசியமானதே என்றார் அவர்.

## 'குண்டுவீச்சை அமெரிக்கா நிறுத்த வேண்டும்'

— ரெபேட் கென்னடி

இதற்கிடையில்,வடவியட்னாம்மீது அமெரிக்கா குண்டு வீசுவதை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று அமெரிக்க செனேட்டர் திரு. ரோபேட் கென்னடி மீண்டும் வலியுறுத்தியுள்ளார் வியட்னாமில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு குண்டுவீச்சு உதவி

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஒருவன் பிரார்த்தனையில நேரத்தைக் கழிக்கிருன். ன்னொருவன் பயனற்ற களியாட்டத்தில் காலங்கழிக்கிருன். இருவரும் அந்தராத்மாவுக்கு உணவளிக்கிருர்கள். ஒருவன் ஆண்டவன் திருக்கோயிலை செப்பனிடுகிருன். மற்றவன் திருக்கோயிலை நாசமாக்கிருன்.

— காந்திமகான்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கவரு ஐப்பசிமீ 29உ (15-11-67)

## இன்றும் நாளையும்

இன்றும் நாளையும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்சபைக் கூட்டமும், செயற்குழுக் கூட்டமும் யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது. கட்சியின் வாலிப முன்னணிக் கூட்டம் நேற்று நடைபெற்றிருக்கிறது. ஓர் அரசியல் கட்சியின் பொதுச் சபை, செயற்குழு, வாலிப முன்னணிக் கூட்டங்கள் நடைபெறுவது பெரிய விஷயமல்ல. ஆனுல் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் இப்போது நடைபெறும் கூட்டம் அந்தக் கட்சி சம்பந்தப்பட்ட வரையிலல்லாது தமிழ் மக்கள் விஷயத்திலும் முக்கியமானது

திருக்கோணமலைத் துறைமுகத்தைதேசியமயமாக்கக்கூடாது என்று தமிழரசுக்கட்சியினர் பிரதமரிடம் தெரிவித்திருந்ததுடன் தேசியமயமாக்குவதற்குப் பதிலாக கூட்டுறவு அமைப்புமுறை ஒன்றைக் கொண்டுவருவதற்கான மாற்றுத்திட்டமொன்றையும சமர்ப்பித்திருந்தனர். இத்திட்டத்தைப் பரிசீலனைசெய்வதாகத் தெரிவித்த பிரதமர், தமிழரசுக் கட்சியினருக்குத் தகவல் எதுவும் தெரிவிக்காமலே தேசியமயத் தீர்மானத்தை அங்கீகரித்திருக்கிருர். இது தமிழரசுக்கட்சியினருக்கு ஏமாற்றத்தையும் அதிருப்தியையும் மட்டுமல்ல பிரதமரின் வாக்குறுதிகளில் இனியும் நம்பிக்கை வைக்கலாமா என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. இதனுல் தமிழரசுக்கட்சி, தேசிய அரசாங்கத்துக்கு அளித்துவரும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் கைவிட்டு அரசாங்கத்திலிருந்து வெளியேறிவிட வேண்டுமென்ற அபிப்பிராயம் கட்சியில் எழுந்துள்ளது. அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டு எனக்கோரும் தீர்மானம் ஒன்றும் இன்று பொதுச் சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்படவிருக்கிறது.

திருமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டது மட்டுமல்ல, தமிழ்மொழி சட்ட (விசேஷ) விதிகள் கொண்டுவரப்பட்டும் அவை சரியாக அமுல் நடத்தப்படாதது, மாவட்டசபைகள் அமைப்பதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படாதது, தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றத்தை தொடர்ந்தும் செய்துவருவது ஆகியவை உ[illegible] தமிழ் பேசும் மக்களின் குறைகளை நீக்க பிரதமரும் தேசிய அரசாங்கமும் தவறிவிட்டது என்று தமிழரசுக் கட்சியைச்சேர்ந்தவர்கள் பலர் குற்றம்சாட்டுகின்றனர். திருமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டது சிறிய விஷயமாக இப்போது தோன்றினுலும் அதன் அரசியல் விளைவுகள் மோசமாக இருக்குமென்றும் கூறப்படுகிறது இக்குறைகள், குற்றச்சாட்டுக்களை அப்படியே தள்ளிவிடமுடியாது. அவற்றில் ஓரளவு நியாயமும் உண்மையுமிருக்கின்றதென்பதை ஒப்புக்கொள்ளவேண்டும்.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் கட்சிக்குள்ளே இருப்பவர்களின்குற்றச்சாட்டுக்களை மட்டுமல்ல, பொதுமக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லையென பொதுமக்களின்குறைகளுக்கும் பதில் சொல்லவேண்டும். சென்ற பொதுத் தேர்தலின் பின் தங்களுக்கு ஆதரவு அளிக்க மறுத்ததற்காக எதிர்க்கட்சியினர் அவர்கள் மீது பழிவாங்கிக் கொண்டிருக்கிருர்கள் இதுதவிர தமிழ் மக்களுக்குள்ளேயே கட்சி அரசியல் போட்டிகள். இவையாவும் சேர்ந்து தமிழ் மக்களுக்கே பாதகமான விளைவுகளை உருவாக்குகின்றன.

தமிழ் அரசுக் கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறிவிட்டால் இக்குறைகள் நீக்கப்பட்டுவிடுமோ, அடுத்து என்ன செய்வது?

1956-ம் ஆண்டிலிருந்து 1965-ம் ஆண்டுவரை தமிழ்மக்கள் அரசாங்கத்தை எதிர்த்து வந்து கண்ட பயன் என்ன?

இன்றுள்ள நிலை ஒரு கட்சிப் பிரச்னையல்ல. இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களின் பிரச்னை. இதில் ஆத்திரத்துடன் அவசரப்பட்டு எதுவித முடிவும் மேற்கொள்வது விவேகமல்ல. கட்சி விருப்பு வெறுப்புக்களை விடுத்து தமிழ் பேசும் மக்கள் அனைவரும் சேர்ந்து ஒரே இயக்கமாக நின்று உரிமைகளைப் பெறுவதற்கு வழிகாணவேண்டும். இதற்கான முறையில் தமிழரசுக் கட்சியின் பொதுச் சபையும் செயற்குழுவும் விவேகமான முடிவைச் செய்யவேண்டும்.

## நீதிராசாவுக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், செவ்.

சென்ட்டர் நீதிராசாவை கௌரவிக்குமுகமாக, சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் இம்மாதம் 17-ந் திகதி மாலை சாவகச்சேரி இந்துக கல்லூரி மண்டபத்தில் ஒரு பாராட்டுவிழா நடத்தவிருக்கிறது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் திரு. மு. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும் இப் பாராட்டு விழாவில், திருவாளர்கள் எஸ். கே. திரவியநாயகம், ஏ. கே. கந்தையா, ஏ. சிவகுரு, இ. சிதம்பரப்பிள்ளை, எம். ஆலாலசுந்தரம், முதலியார் செ. சின்னத்தம்பி, திரு. மு. சபாரத்தினம், திரு. கே. எஸ். ஆனந்தன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவார்கள்.

மீசாலை புகையிரதநிலைய சந்தியிலிருந்து அன்று பிற்பகல் ஊர்வலம் ஆரம்பமாகும்.

## இரத்தப் பரிசோதனை

பண்டத்தரிப்பு, செவ்,

மலேரியாநோயின் பிதியையொட்டிமக்களின் இரத்தத்தைப் பரிசோதனை செய்து மலேரியா பரவக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கிறதோவென்று ஆராய்ந்து வருகின்றனர்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## நியாயவிலையில் அரிசி

தற்பொழுது கூப்பனுக்கு வழங்கப்படாத அரிசி கள்ளச்சந்தையில் ரூ 1.40 சதத்திற்கு விற்பனையாகின்றது. இப்படியாக விற்பனை செய்யப்படும் அரிசிக்கு கட்டுப்பாட்டு விலையில்லாத காரணத்தால் வியாபாரிகளின் விலைஇடத்நிதிற்கிடம் வேறுபட்டிருக்கின்றது. இதனைத் தடுப்பதற்கும்கள்ளச்சந்தை வியாபாரிகளின் கெடுபிடிகளை நீக்கும் நோக்கத்துடனும் அரசாங்கம் எல்லா இடங்களிலும் நிதான விலை நிலையங்களை நிறுவி அதன் மூலம் நாட்டரிசியை விநியோகம் செய்தால் பொது மக்கள் பெரிதும் நன்மை பெறுவர். அல்லாவிட்டால் அரிசியை தொடர்ந்தும் கூடுதலான விலைகொடுத்தே பொதுமக்கள் வாங்க நேரிடும்.

மு. குமாரசாமி

யாழ்ப்பாணம்.

## வர்த்தக விடுமுறை

போயாதின விடுமுறை நடைமுறைக்கு வந்த பின்னர் சில வர்த்தக ஸ்தாபனங்கள் போயாதினத்திலும, ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஸ்தாபனங்களைத் திறந்து வியாபாரம் நடத்தி வருகின்றன. இதனுல் அங்கு வேலை செய்யும் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டத்திற்குள்ளாக வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. போயாதின விடுமுறை வருவதற்கு முன்னர் சில இடங்களில் வர்த்தகர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் நிலையங்களை மூடி வந்தனர். யாழ்ப்பாணத்திலுள்ள தொழில் இலாகா இன்ஸ்பெக்டர்கள் இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுப்பார்களா?

பொ. சின்னத்தம்பி,

சுழிபுரம்.

## குறை கூறுவதா?

பொதுவாக பஸ் பிரயாணிகள் பஸ் ஊழியர்களையே குறை கூறி வருகின்றனர். உண்மையில் பஸ் பிரயாணிகளும் கொண்டக்டர்களுடன் மற்ற சிப்பந்திகளுடனும் ஒத்துழைத்தால் அதில் எவ்வளவோ நன்மையுண்டென்பதை உணரவேண்டும். சில சமயங்களில் 10 சதப் பிரயாணத்திற்கு 5 ரூபா நோட்டை நீட்டுவதும், பஸ்ஸில் ஏறிய பின்னர் முன் செல்லாது அவ்விடத்திலேயே கொண்டக்டர் திரும்பத் திரும்பக் கூறியபின்னும் நிற்பதும், இ. போ. ச. ஊழியர்களுக்கு கஷ்டம் கொடுப்பதாகும். பஸ் பிரயாணிகளும் பஸ் ஊழியர்களும் உரிய கட்டணத்தைக் கொடுத்துதவினுல் தினமும் பிரச்னைகள் இருக்க முடியாது. பஸ் கொண்டக்டர் தினமும் பல பிரயாணிகளுடன் பழகுகிருரென்பதையும் அதனுல் அவரின் வசதியீனத்தையும் நாம் மனதில் கொள்வது நன்மை பயக்கும்.

வ. பொன்னம்பலம்.

மானிப்பாய்.

[11-ம் கலத்தொடர்ச்சி]

ஏர்தரும் ஏழுலகேத்த
எவ்வுருவும்தன உருவாய்,
ஆர்கலி சூழ் தென்இலங்கை
அழகமர் வண்டோ
தரிக்குப்
பேரருள் இன்பம் அளித்த
பெருந்துறை மேய
பிரானைச்,
சீரிய வாயால் குயிலே
[illegible]
கூவாய்.

—ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமான்.

# "இரு கட்சிகளையும் கலைத்து விடுங்கள்

[தமிழரசுக்கட்சித்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கும் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கும், ஜனநாயக சோஷலிஸ்ட் கட் யின் ஸ்தாபகரும் பொதுச்செயலாளருமான திரு. விஜய இந்திரா, ஒரு நீண்ட பகிரங்கக் கடிதம் எழுதியிருக்கிருர். அக்கடிதத்தின் ஒரு பகுதி இது.]

தமிழரசுக்கட்சியும், தமிழ்காங்கிரஸ் கட்சியும் ஒன்றுக்கொன்று விரோதித்துக்கொண்டு பிளவுபட்டுக் கொண்டு நிற்பதால் தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெறமுடியாதிருக்கிருர்கள். இதன் காரணமாக பொருளாதார, கல்வி துறைகளிலெல்லாம் அவர்கள் வெகுவாகப் பாதிகக்கப்பட்டு வந்துள்ளார்கள். தனிப்பட்ட குரோதங்கள் தமிழர்களின் எதிர்காலத்தையே பாதிப்பதாக அமைந்திருக்கிறது.

தமிழர்கள் இன்று பிற இன மக்களால் ஏளனம் செய்யப்படக்கூடிய பரிதாபநிலையி லிருப்பதற்கு உங்களது சுயநல நோக்கங்களே காரணமாயிருந்துள்ளது இந்த சுயநலப்போக்கால் தமிழர்கள்மிகவும் பலகீனப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

1965-ம் வருடம் மார்ச் மாதத்தில் தமிழரசுக்கட்சிக்கு குறைந்தபட்சம் மூன்று அமைச்சர் பதவிகளையும் மூன்று உதவி அமைச்சர்கள் பதவிகளையும்தரவேண்டுமென தேசிய அரசாங்கத்திடம் கேட்டிருந்தால் தமிழரின் சரிந்த நிலையை ஓரளவு நிமிர்த்த வாய்ப்புக் கிடைத்திருக்கும்.

— விஜய இந்திரா —

தமிழ்காங்கிரஸ், தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட்டபின்னராவது தமிழர்களின் நலனை முன்னிட்டு ஒத்துழைத்து தேசிய அரசாங்கத்தில் ஓர் அமைச்சர் பதவியையும், உதவிஅமைச்சர் பதவியையும் பெற்றிருந்தால் தமிழர்களுக்கு இன்று 4 அமைச்சர் பதவியும் 4 உதவிஅமைச்சர்கள் பதவியும் தேசியஅரசாங்கத்தில் கிடைத்திருக்கும். இவ்விதம் ஏற்பட்டிருந்தால் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா இப்போது நடத்துவதுபோல் இவ்வளவு கேவலமாக நடத்த முற்பட்டிருக்கமாட்டார்.

இப்போதுள்ள குழ்நிலையில் நீங்கள செய்யவேண்டியது உங்கள் பதவிகளை ராஜினுமாச்செய்து விட்டு உங்கள் கட்சிகளான தமிழரசுக்கட்சியையும், தமிழ்காங்கிரஸ் கட்சியையும் கலைத்துவிடுவதே. சிங்கள மக்களும் முஸ்லிம்மக்களும் முன்னேற்றப் பாதையி[illegible] பல மைல்களுக்கப்பால் சென்றுவிட்டபோது உங்களது தலைமையில் இருபது ஊருட காலத்துக்கு மேலாக தமிழர் [illegible]ழ்க்கை [illegible] சீர்குலைக்[illegible]பட்டு[illegible]ள்ளது எனவே மேற்கண்ட முடிவே நல்லது [illegible] எனப்படுகிறது. நீங்கள் இருவரும் ஏககாலத்தில் அரசியல் துறவறம் பூண்டுவிட்டால் உங்களை விட நேர்மையான விசுவாசமான இளம் தலைமுறையொன்று தமிழர்களை வழிநடத்தத் தலைப்படும். இவ்விதம் நேரும்போது தமிழர் தாம் இழந்தவற்றை மீண்டும் பெற வாய்ப்பு ஏற்படும். இலங்கையில் பாரம்பரியமாக பண்டு தொட்டு வரும் ஒரு தன்மானமுள்ள இனம் என்பதை நிரூபிக்கும்நிலை அப்போது வந்துசேரும்.

## சமஷ்டி நைஜீரிய விமானதாக்குதல்

லாகோஸ், நவ. 1[illegible]

நைஜீரியாவில் சமஷ்டி விமானங்கள் தாக்கியதன் விளைவாக, 12 சிவிலியன்கள் கொல்லப்பட்டதாகவும் 20 பேருக்குக் காயமேற்பட்டதாகவும், பிரிவினை 'பியாஃப்ரா' வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆனுல் இத்தாக்குதல் பற்றி எதுவும் கூற, சமஷ்டி வட்டாரங்கள் மறுத்துவிட்டன.

## ஹோசிமின்னுக்கு சுகவீனம்

புதுடில்லி, நவ. 1[illegible]

ஸ்காண்டி[illegible]னேவியாவிலிருந்து கிடைக்கும்செய்திகள், வடவியட்னும் அதிபர் திரு. ஹோசி சிமின், உடல் நலமற்றிருப்பதாகக் கூறுகின்றன.

## பூன்வாட்டின் பிள்ளைகள்

### ரங்கூன் பயணம்

கொழும்பு, செவ்வாய்

இலங்கையில் பர்மியத் தூதராகக் கடமையாற்றியதுரு. பூன்வாட்டின் பிள்ளைகள் இன்று காலை விமானத்தில் ரங்கூன் பயணமானுர்கள்.

திருமதி பூன்வாட் மரணம் சம்பந்தமாக திரு. பூன்வாட் பர்மாவுக்கு அழைத்துச் செலலப்பட்டபின் அவரது பிள்ளைகள் இப்போதுதான் ரங்கூன் செல்கின்றனர். தாய்தந்தையுடன் வந்தபிள்ளைகள் இப்போது தனியாகச்செல்கின்றனர்.

திருமதி பூன்வாட் மரணம் சம்பந்தமாக நடைபெற்ற விசாரணை விபரங்கள் மலேஷிய அரசாங்கத்துக்கும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத்தெரிகிறது பர்மியத் தூதரின் இல்லத்திற்குள் நடைபெற்ற சம்பவங்கள் சம்பந்தமாக மலேஷிய அரசாங்கமோ இலங்கை அரசாங்கமோ எவ்விதசட்ட நடவடிக்கையும் மேற்கொள்வதற்கு அதிகாரமில்லை.

## காருன் கடத்தல்சேலைகள்?

வல்வெட்டித்துறை, செவ்வாய்

வல்வெட்டித்துறைப் பொலிசாருக்குக் கிடைத்த ரகசியத் தகவலைத் தொடர்ந்து இன்ஸ்பெக்டர் திரு. சி. எல். விஜயதிலகா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியொன்று ஒருகாரை சோதனையிட்டபோது அக்காரினுள் இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் சேலைகளைக் கைப்பற்றினர்.

பருத்தித்துறை-தொண்டமானுறு ரோட்டால் அக்கார் அதிவேகமாகச் சென்றபோது சந்தேகம் கொண்ட பொலிசார் அக்காரைத் துரத்திப்பிடித்து சோதனையிட்டபோதே பெறுமதி வாய்ந்த 17 சேலைகள் கொண்ட பார்சல் அதில் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சேலைகளையும் காரையும் அதிலிருந்த ஒரு நபரையும் பொலிசார் சுங்க இலாகாவினரிடம் ஒப்படைத்துள்ளனர். விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது

## இன்றைய பலன்

15-11-67

புதன்கிழமை

ஐப்பசிமாதம் 29-ந் திகதி

நட்சத்திரம்- அச்சுவினி இரவு 12-20 மேல் பரணி.

திதி- திரயோதசி காலை 6-14 மேல் சதுர்த்தசி.

சுபநேரம்- 4-37—6-07.

ராகுகாலம்- 12-07—1-37.

மேஷம்- உறவாடும் உள்ளம் உறங்காத நிலை.

ரிஷபம்- சொல்லும் வெல்லும் வசீகரமுண்டு.

மிதுனம்- அலைமோதும் மனம் நடுநிலை தவறேல்.

கடகம்- மனைச்சிறப்பு, தனவிருத்தி.

சிம்மம்- புகழ்பட வாழ்தல் புத்திரர் மேம்பாடு.

கன்னி- பெருமைக் குணம் பொறுமைக்குப் பங்கம்.

துலாம்- செல்வாக்குப் பெருகும் சிறந்தநாள்.

விருச்சிகம்- தொழில் ஜெயக்குறைவு, துணைவர் பகை.

தனுசு- பெரியோர் மதிப்பு பிதாவழிச் சுகம்.

மகரம்- செயல்திறன் மதிப்புமுண்டு.

கும்பம்- தேடியது கிடைக்கும் நிம்மதி பிறக்கும்.

மீனம்- தடுமாற்ற முண்டு மனமாற்றம் வேண்டும்.

—சோதிடக் கலாநிதி—

திருமலை வேலுப்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...யும்
# ...ங்கள்

...வநாயகத்துக்கும்
...லத்துக்கும், ஜன
...துச்செயலாளரு
... கடிதம் எழுதி
...இது.]

...துழைத்து தேசிய அர
...ங்கத்தில் ஓர் அமைச்சர்
...வியையும், உதவி அமைச்
... பதவியையும் பெற்
...ந்தால் தமிழரசுக்கு
...ன்று 4 அமைச்சர் பதவி
... 4 உதவி அமைச்சர்கள்
...வியும் தேசிய அரசாங்
...தில் கிடைத்திருக்கும்.
...விதம் ஏற்பட்டிருந்தால்
...தமர் திரு. டட்லி சேன
...யகா இப்போது நடத்
...துபோல் இவ்வளவு
...வலமாக நடத்த முற்
...டிருக்கமாட்டார்.



...இப்போதுள்ள சூழ்நிலை
... நீங்கள் செய்யவேண்
...து உங்கள் பதவிகளை
...ஜினாமாச்செய்து விட்டு
...கள் கட்சிகளான தமி
...சுக்கட்சியையும், தமிழ்க்
...ங்கிரஸ் கட்சியையும்
...த்துவிடுவதே. சிங்கள
...களும் முஸ்லிம்மக்களும்
...ன்னேற்றப் பாதையில
... மைல்களுக்கப்பால்
...ன்றுவிட்டபோது உங்
...து தலைமையில் இருபது
...ட காலத்துக்கு மேலாக
...மிழர் வாழ்க்கை சீர்
...லக்கப்பட்டுள்ளது.
...னவே மேற்கண்ட முடிவே
...லது எனப்படுகிறது.
...கள் இருவரும் ஏககாலத்
... அரசியல் துறவறம்
...ண்டுவிட்டால் உங்களை
... நேர்மையான விசுவாச
...ன இளம் தலைமுறை
...பான்று தமிழர்களை வழி
...த்தத் தலைப்படும். இவ்
...நம் நேரும்போது தமி
... நாம் இழந்தவற்றை
...ண்டும் பெற வாய்ப்பு
...படும். இலங்கையில்
...ரம்பரியமாக பண்டு
...நாட்டு வரும் ஒரு தன்
...னமுள்ள இனம் என்
...தை நிரூபிக்கும்நிலை அப்
...தாது வந்துசேரும்.

## ...மஷ்டி நைஜீரிய
## ...மான தாக்குதல

...லாகோஸ், நவ. 14
...நைஜீரியாவில் சமஷ்டி
...மான...ங்கள் தாக்கியதன்
...ளவாக, 12 சிவிலியன்
... கொல்லப்பட்டதாகவும்
... பேருக்குக் காயமேற்
...டதாகவும், பிரிவினை
...யாவ்ரா' வட்டாரங்கள்
...ரிவித்துள்ளன.
...ஆனால் இத்தாக்குதல்
...றி எதுவும் கூற, சமஷ்டி
...ட்டாரங்கள் மறுத்துவிட்
...ன.

## ...ஹாசிமின்னுக்கு
## சுகவீனம்

புதுடில்லி, நவ. 14
...ஸ்காண்டி. னேவியாவில்
...ந்து கிடைக்கும்செய்தி
...ர், வடவியட்னாம் அதிபர்
...ர். ஹோசி சிமின், உடல்
...மற்றிருப்பதாகக் கூறு
...றன.

# 'ஆரம்பத்திலேயே சிகிச்சை பெற்று விடுங்கள்'

## தோல்வைத்திய நிபுணர் புத்திமதி

இமையாணன், செவ்.

"மேக நோய் போன்ற தோல் சம்பந்தமான நோய்கள் உள்ளவர்கள் ஆரம்பத்திலேயே தகுந்த டாக்டர்களிடம் காட்டி சிறந்த சிகிச்சையைப் பெறவேண்டும்." இவ்வாறு யாழ்ப்பாணம் அரசினர் வைத்திய சாலையின் டாக்டரும் தோல் சிகிச்சை வைத்திய நிபுணருமான திரு. பி. சிவசோதி உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் ஒரு விரிவுரையின்போது கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:- "சத்திரசிகிச்சை செய்யவேண்டும் என்று நாம் கூறினால் பலர் இதற்குப்பயப்படுகிறார்கள். செய்யவேண்டியதை முதலில் செய்து, தாமதமில்லாமல் சுகப்படுத்தவேண்டும்.

அரசாங்கம் எத்தனையோ மடங்கு கூடுதலான சம்பளத்தைத்தந்து டாக்டர்களை அமர்த்தியிருக்கும்பொழுது, சம்பளம் குறைந்த ஆஸ்பத்திரி ஊழியர்களிடம் பல நோயாளிகள் சிகிச்சைபெற முயல்கின்றனர். அப்படிச் செய்யாமல் பெறுவதை நல்ல இடத்தில், நல்ல மருந்தை, நல்ல சிகிச்சையைப்பெறவேண்டும். பலர் அடுத்த வீட்டுநோயாளியின் மருந்தை அதற்கு முரணான நோய்க்குப் பாவிப்பதும் உண்டு.

'டாக்டர்களைப் பார்த்து சிகிச்சைபெற முடியவில்லை' என்று பலர் குறைகூறுகிறார்கள். இதற்கு நாம்என்ன செய்வது. ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகவரும் நோயாளிகள் அரைநாள்வரையும், சில நேரம் ஒரு நாள்முழுவதுமே செலவிடவேண்டியுள்ளது. பழையகாலச்சாப்பாடுகளைச் சாப்பிட்டால் பல நோய்களைத் தடுக்கலாம்.

நீரைக் கொதிக்கவைத்து ஆறவைத்துக் குடித்தால் அநேகமான நோய்கள் வரமாட்டாது. உடுப்புகள் துப்பரவாகஇருத்தல்வேண்டும்.

# இளைஞரின் கன்னத்தில்

## இராணுவ சிப்பாய் அறைந்தாராம்

வல்வெட்டித்துறை, செவ்.

வல்வெட்டித்துறை மதவடிக் கடற்கரையில் நேற்று இரவு வீடுதிரும்பிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவரை அவ்வழியால் ரோந்து சுற்றிக்கொண்டுவந்த இராணுவசிப்பாய் ஒருவர் தாக்கியதாகத் தெரியவருகிறது.

இந்த இளைஞரின் முகத்தில் டோர்ச்லைற் வெளிச்சமடித்து தடுத்துநிறுத்தி புரியாத பாஷையில் இந்தச் சிப்பாய் ஏதோ கேட்டதாகவும் மொழி புரியாத காரணத்தால் ஒன்றும் பேசாமல்இருந்த இளைஞனின் முகத்தில் உடனே குறிப்பிட்ட இராணுவ சிப்பாய்அறைந்ததாகவும் இளைஞர் வீட்டுக்கு ஓடிச்சென்று பெற்றோரிடம் முறையிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# இந்தியாவுக்கு உதவியளிக்கும் மேற்குநாடுகள் சம்மேளனம்

## அதன் விவசாய அபிவிருத்தியில் திருப்தி தெரிவித்துள்ளது

பாரிஸ், நவ. 14

பாரிஸில் கூடியுள்ள. இந்தியாவுக்கு உதவியளிக்கும் மேற்கு நாடுகளின் சம்மேளனம், இந்தியாவின் விவசாய அபிவிருத்தித்திட்டங்களுக்குத் திருப்தியும், பாராட்டும் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் விவசாயக் கொள்கையை அமெரிக்கப் பிரதிநிதி பெரிதும் பாராட்டிப் பேசினார்.

முன்னதாக, இந்தியப் பிரதிநிதி, விவசாயத்துறையில், இந்தியாமேற்கொண்டு வரும் முயற்சிகளை விரிவாகச் சம்மேளனத்துக்குவிளக்கினார்.

காங்கேசன் துறையிலிருந்து

# அதிகாலை ரயில் சேவை

## ஆரம்பிக்க கோரிக்கை

அளவெட்டி, செவ்வாய்

காங்கேசன் துறையில் இருந்து காலையில் புறப்படும் 'உருத்திரதேவி' [கடுகதிப்] புகையிரதத்தில், பிரயாணிகள் பிரயாணஞ் செய்ய மிகவும் கஷ்டமடைவதாகவும் பிரயாணிகளின் கஷ்டத்தைப் போக்க, சென்ற ஆண்டுகளில், உருத்திரதேவிக்கு முன்னதாக அதிகாலை 5-05க்கு காங்கேசன் துறையிலிருந்து, எல்லா நிலையங்களிலும் தங்கிச் செல்லும் புகையிரத சேவையை ஆரம்பித்து பிரயாணிகளுக்கும், சந்தைக்கு செல்லும் விவசாயிகளுக்கும், உதவிசெய்யவேண்டுமென, பழை வீமன்காமம் கிராமமுன்னேற்றச் சங்கம் புகையிரதப்பகுதி பிரதம மனேஜரைக் கேட்டுள்ளது. மாவிட்டபுரம் தெல்லிப்பளை, மல்லாகம் ஆகிய புகையிரதநிலையங்களில் இருந்து கொழும்பு போன்ற தூரஇடங்களுக்கு, அதிகாலையில் செல்லும் பிரயாணிகள், சுன்னாகத்தில் உருத்திரதேவி கடுகதிப் புகையிரதத்தில் பிரயாணம் செய்ய நல்ல போக்குவரத்து வசதியில்லாமல் சிரமப்படுவதனாலும் இப்பகுதிகளிலுள்ள விவசாயிகள் தம்மால் உற்பத்தி செய்யப்பட்ட வாழைக்குலை வெற்றிலைபோன்ற உற்பத்திப்பொருட்களை பஸ்வண்டி மூலம் கொண்டு சென்று அதிகாலையில் சுன்னாகம் சந்தையில் விற்க இயலாமல் கஷ்டமடைவதாலும் பிரயாணிகளுக்குபஸ்சேவை உரிய நேரங்களில் கிடைக்க வசதிகள்இல்லாமல் இருப்பதாலும் அதிகாலையில் உத்திர தேவிக்கு முன்னதாக ஒருபுகையிரத சேவையை காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம்வரை ஆரம்பித்து பொதுமக்களின் கஷ்டங்களை நீக்கும்படியும் சங்கம் கோரியுள்ளது.

## புதிய பஸ் சேவை

யாழ்ப்பாணம், புதன்

இன்றுமுதல் பருத்தித்துறையிலிருந்து மன்னார், முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கு புதிய பஸ் சேவையொன்று ஆரம்பமாகும்.

பருத்தித்துறையிலிருந்து புறப்படும் பஸ்கள், யாழ்ப்பாணம் சென்று அங்கிருந்து மன்னார் முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்குச்செல்லும்.

# அருள் மொழி அரசு யாழ்ப்பாணம்வருவார். ஆனால்...

"மாதக்கணக்காக வருடக்கணக்காக, தங்களைத் தரிசிப்பதற்கு யாழ்ப்பாணத்தில் பலர் தவங்கிடக்கின்றனர். இம்முறை தாங்கள் அங்கு வருவீர்களென்றே மிக ஆவலுடன் இருந்தோம் தாங்கள் வராமல் போவது எங்களுக்கெல்லாம் பெரிய ஏமாற்றம்."

என்று அருள்மொழி அரசு, திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளிடம் கூறி, இரண்டொரு நாட்களாவது இம்முறை அங்கு வரமுடியுமா என்று கேட்டேன்.

அவர் யாழ்ப்பாணத்தின் அன்புக்கு நன்றி தெரிவிக்குமுகமாகத் தலை அசைத்து, பொக்குவாய்(காந்தி)சிரிப்பு சிரித்துக்கொண்டே, தமது சுற்றுப்பிரயாண திட்டமடங்கிய ஒரு தட்டச்சுப் பிரதியைக் கொடுத்தார்.

சென்ற ஜூலை மாதம் 19-ந் திகதியிலிருந்து 1968ம் வருடம் ஏப்ரல் மாதம் வரையுள்ள அவரது நிகழ்ச்சி நிரல் திட்டம் அதில அடங்கியுள்ளது. கோபிசெட்டிப்பாளயம், திருவாரூர், திண்டுக்கல், கும்பகோணம், சென்னை நாகர்கோவில், டெல்லி, பம்பாய், தேவகோட்டை வேலூர் இவ்வூர்களில் நவம்பர் 9-ம் திகதிவரை நிகழ்ச்சிகள். அதற்குப் பின், நவம்பர் 10 முதல் டிசம்பர் 20 வரை (40 நாட்கள்) இலங்கை என்று போட்டு பின்னர் பலபல ஊர் செல்வதாக அந்த நிகழ்ச்சி நிரல் தெரிவித்தது.

"நாற்பது நாட்கள் ஈழத்தில் இருப்பதாகத்தான் உத்தேசித்திருந்தேன். கொழும்பில் 20 நாட்கள், மலைநாட்டில் 10 நாட்கள், யாழ்ப்பாணத்தில் 10 நாட்கள் என்று. ஆனால் எதிர்பாராதவிதமாக டிசம்பர் 5-ந் திகதி சிதம்பரத்தில் இருக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. அங்கு கோவில் திருப்பணிச் சபைத் தலைவரும் அறப்பெரும் செல்வரும் எனது அருமை நண்பருமான ரத்னசாமி செட்டியாருடைய மணிவிழாவுக்குச் செல்லவேண்டும்; தவிர்க்கமுடியவில்லை.

"15 நாள் ஒதுக்கிக்கொண்டு, வருகிற ஆடி, ஆவணியில், யாழ்ப்பாணம் வரத் திட்டமிட்டுள்ளேன். சுழிபுரம் அன்பர் எம். சிவப்பிரகாசம் தம்பதிகள் நேரில் வந்து இருமுறை அழைத்தனர். அங்குள்ள அறுபத்திமூவர் மடாலய 60வது ஆண்டு விழாவுக்கு வர ஒப்புக்கொண்டிருக்கிறேன். இம்முறை யாழ்ப்பாண மக்கள் என்னை மன்னிக்கவேண்டும்" என்றார்.

∴ ∴ ∴

கொழும்புக்கு அவர் வந்து (ஒரு மாமாங்கம்) 12 வருடமாகின்றன. யாழ்ப்பாணத்துக்கு வந்து 9 வருடங்கள் தான். யாழ்ப்பாணத்துக்கு தாம் அடிக்கடி வந்துள்ளதாயும் அதற்கென வழக்கம் போல் தனிப் பிரயாணத் திட்டம் அமைத்து வருவதாகவும் தெரிவித்தார். பதில் என்ன பேசுவது? இதுவும் திருவருள்போலும். என்றாலும் யாழ்ப்பாணத்திலிருந்தும் பல அன்பர்கள், அவரது அருள் வாக்கைக் கேட்க கொழும்புக்கு வந்திருக்கிறார்கள். இப்போது விட்டால் இனிஎப்போதோ!

கொழும்பு வானொலி இந்த அரிய பிரசங்கங்களை ஒவ்வொருநாளும் ஒலிப்பதிவுசெய்து, வசதிபோல் ஒலிபரப்பினால் எவ்வளவோ பயன்படும் வெறும் டப்பா சங்கீதங்களைப்போடுவதைக் குறைத்து, நவரசங்களும் ததும்பும் இந்த அருமையான ஞானதான பிரசங்கங்களை ஒலிபரப்பினால் தமிழ்கூறும் நல்லுலகுக்கு மட்டுமன்றி கொழும்பு வானொலிக்கே எவ்வளவு நன்மை! காசு பணம் செலவில்லாமல் கிடைத்துள்ள இந்த நல்ல வாய்ப்பை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஏற்பாடு செய்யாததுபெரிய நட்டம். இனி மிச்சமுள்ள சில நாட்களாவது அஞ்சல் செய்யலாம். இது சமயப் பிரசங்கமல்ல. எம்மதத்துக்கும் சம்மதமானது. எல்லாரும் ரசிக்கக்கூடிய பயனுள்ள பாரதப் பேச்சுக்களாகும். ஆனாலும்..?

∴ ∴ ∴

யாழ்ப்பாணத்திலே ஆலயப்பிரவேச சிக்கலைப்பற்றிக் கூறி அவரது கருத்தைக் கேட்டேன். "பிடிவாதக்காரர்கள் இருக்கிறார்களோ?" என்று வினவினார்.

இருபக்கமுமுள்ளனரென்பதை அறிந்ததும், இதில் தாம் தலையிட விரும்பவில்லை என்றும் தலையிட்டால், தாம் கூறும் மற்ற விஷயங்களையும் கேளாமல் ஒதுக்கிவிடலாமென்றும் ராஜதந்திரத்துடன் கூறினார்.

தமிழ்நாட்டில் எப்படி என்று கேட்டதற்கு, 'அங்கு எல்லாக் கோவில்களும் சட்டப்படி திறந்துவிடப்பட்டுள்ளன. ஆனாலும் பெரும்பாலான கோவில்களுக்கு மக்கள் வருவதில்லை" என்றார்.

கே:- கோவில்கள் மூலம், மக்களின் பசி தீர்க்கும் சமூக சேவைகளைச் செய்ய முடியாதா?

ப:- கோவில் நிலங்களை எல்லாம் குடிவார உரிமைச் சட்டத்தில் சேர்த்துவிட்டதால், கோவில் வருமானம் மிகவும் குறைந்துவிட்டது. திருவாரூர் கோவிலுக்கு ஆயிரம் வேலி (சுமார் 7000 ஏக்கர்) நஞ்சையுண்டு. ஆனாலும் இப்போது கிடைக்கும் வருமானமோ கோவில் நிர்வாகத்துக்கே காணாது. சமூக சேவைகளை எப்படிச் செய்யமுடியும்? கோவில் நிலங்களையாவது அந்தச்சட்டத்திலிருந்து விலக்கவேண்டுமென்று முன்னாள் முதல் மந்திரியிடம் கேட்டபோது, தமது கட்சியினர் இதற்குச் சம்மதிக்கமாட்டார்களே என்றுவிட்டாராம். பல கோவில்களில் பூசைகள் இதனால் தடைபட்டு, குருக்கள், சிப்பந்திகள் முதலியவர்களுக்கும் சம்பளம்கூட சரிவரக் கிடைக்கமுடியாமலிருக்கிறதாம் என்றார். அடகடவுளே;

∴ ∴ ∴

தெய்வத்தின் கோபசாபம் தான், சென்ற அரசாங்கம் தமிழகத்தில் தோற்றதற்கு முக்கிய காரணமென்று ஒரு கோவில் தர்மகர்த்தா கருத்துத் தெரிவித்தாராம். ஏதாவது கோவில் பூசை சரிவர நடவாததால்தான், வைகையால் வெள்ளமும் அழிவும் வந்ததோ என்று பாண்டிய மன்னன் கேட்டானாம். தமிழகத்தின் உயிர்நிலையங்களான கோவில்களுக்கெல்லாம் இப்போது வருமானம் குறைந்து பூசைகள் தடைபட்டுள்ளதால்தான், அங்கு பஞ்சம், வரட்சி வெள்ளம் முதலியன வருகின்றனவா? அறிவாளிகளும் தெய்வ நம்பிக்கையுமுள்ள தமிழர்கள் சற்றே சிந்திப்பார்களா? சிந்தித்து பழைய தவறுகளைத் திருத்துவார்களா? பலசமூகசேவைகளைக் கோவில்கள்மூலம் செய்தால் அரசாங்கத்தின்சங்கடங்கள் பெரிதும் குறையுமே?

கே:-தமிழகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தெய்வீகப் பேரவை, இலங்கையிலுள்ள சைவமக்களின் தேவையையும்கவனிக்குமா?

ப:-கவனிக்க வேண்டியது தான். இங்குள்ள சைவஸ்தாபனங்கள், இதுபற்றி கேட்டுக்கொண்டால் கூடுமானதைச் செய்யக்கூடும்.

∴ ∴ ∴

தமது19-வது வயதுமுதல் ஊர்ஊராகச் சென்று பிரசங்கம் செய்துவருகிறாராம். வாரியார் சுவாமிகள். இப்பணிக்கு இதுவரை எவ்வித தடையும் உடல்நலக்குறைவால் ஏற்பட்டதில்லையாம். அவரது உடல் நலத்தின் ரகசியமென்ன வென்று கேட்டதற்கு, ஆண்டவனுடைய கருணையும் ஒழுக்கமும்தான் என்றார் சுவாமிகள்.

இதுவரை தமது பிரசங்கங்கள் மூலம் பல திருப்பணிகளுக்கு லட்சக்கணக்கிலே சேர்த்துக் கொடுத்துள்ள மகான் அவர். வயலூர் முருகன் கோவிலுக்கு 3 லட்சம், சென்னை குயப்பேட்டை கந்தசுவாமி கோவில் ஒன்றரைலட்சம், காங்கேயநல்லூர்முருகன் கோவிலுக்கு 2 லட்சம், வடலூர் சத்யஞான சபைக்கு 4 லட்சம், மோகனூர் அருணகிரி நாதர் அறச்சாலைக்கு ஒரு லட்சம், காங்கேய நல்லூர் ஹைஸ்கூலுக்கு சுமார் ஒருலட்சம் திருப்பராய்த்துறை ராமகிருஷ்ண குடிலுக்கு ஒருலட்சம், [அங்கு] 333 எளிய மாணவர்கள் இலவச உணவுமுதலியனபெற்று கல்வியபியிலுகின்றார்கள். இதுஇல்லாவிடில் அவர்கள்மதம்மாறியிருப்பார்களாம்.) இதுதவிர மாதாமாதம் அவர் பல மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப்பாக மூவாயிரம்ரூபாய் வரை கொடுக்கின்றார். வடலூரில் முன்னாள் முதல்வர்ஓமந்தூர்ராமசாமி ரெட்டியார் நடத்தும் குருகுலத்துக்கு ஒருலட்சம் மதிப்புள்ள தமது நிலத்தை தந்துதவியுள்ளாராம். அவரும் அவரது தர்மமும் வாழ்க!

இவ்வளவு திருப்பணிகளைச் செய்துவரும் அப்பெரியார், திருக்கேதீச்சர திருப்பணிக்காக யாழ்ப்பாணம், மலைநாடு முதலிய இடங்களில் தொடர் பிரசங்கம் நடத்தினால் தேவையான பணம் சேர்ந்துவிடலாம். திருப்பணிச் சபை ஆவன செய்யுமா?

∴ ∴ ∴

திருக்கேதீச்சரம்தான் திருப்பெருந்துறை என்பதற்கான சில அத்தாட்சிகளைக் கூறி, அவரது கருத்தைக் கேட்டேன். அவர் புன் முறுவல் செய்து இது ஆராய்ச்சிக்குரியதுதான் என்றார். இதுபற்றி ஒரு கருத்தரங்கம் நடத்தி இதற்கான ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்றார் ஒரு சைவப் பெரியார். திருக்கேதீச்சரம்தான் திருப்பெருந்துறை என்று சைவ உலகம் ஒப்புக்கொண்டால் நமது ஈழத்தின் பெருமை எவ்வளவு உயரும்!

[3-ம் கலம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுகில் சூடுபட்டதும் குப்புற விழுந்தேன்

## அச்சுவேலி வழக்கில் சட்சியம்

குரும்பசிட்டி, செவ். சம்பவதினம் அச்சுவேலி பிள்ளையார் கோவிலின் அருகிலுள்ள வயலில் கத்திக் குத்துக் காயப்பட்டிருந்த பாலசிங்கம் என்ற நபரை நான் பார்க்கச் சென்றேன். என்னைப் பின்தொடர்ந்து பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றும் வேறு பலரும் வந்தனர். பாலசிங்கத்தை எவரும் குத்தியதைக் காணவில்லை. காயமடைந்தவருக்கு அருகில் சென்றதும் அவரது தாய் தந்தையர் நிலத்திலிருந்து மடியில் தூக்கிவைத்திருப்பதைக் கண்டேன். அந்நேரம் கோவில்வாசலில் வந்து நின்று கொண்டிருந்த பொலிசாரிடம்நான்சென்று காயப்பட்டவரின் நிலையைக் கூறி கவனம் எடுக்கக்கோரினேன். பொலிசார் தாம் கவனிப்பதாகச் சொல்லி என்னைப் போகுமாறு கூறினர். காயப்பட்ட நபர் கிடந்த இடத்தில் நின்ற எனது தகப்பனாரும் என்னுடன் கூட பொலிஸ் கான்டபிளிடம் வந்தார்.

அச்சுவேலி கலவர கொலை முயற்சி வழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு ரி. எஸ் நெத்தசிங்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சாட்சியமளித்த காயமடைந்த கணபதி தேவராசா (வயது 25) மேற்கண்டவாறு கூறினர்-

தமதுசாட்சியத்தின்போது தேவராசா மேலும் கூறியதாவது -நானும் தகப்பனாரும் காயப்பட்டவர் கிடந்த இடம் நோக்கி திரும்பி வந்து கொண்டிருந்தோம். அப்போது எதிரி துவக்குடன் ஓடிவருவதைக் கண்டேன். எதிரி கோவிலுக்குப் பின்னுள்ள பாடசாலைப்பக்கத்திலிருந்து ஓடி வந்தார். எம்மை நோக்கி துப்பாக்கியை நீட்டியபடி எதிரி வந்தபோது எனது தகப்பன் 'எடே சுடாதே' எனக் கூறினர். எதிரி எங்களை அவ்விடத்தைவிட்டு உடனே ஓடி விடக் கூறினர். நாம் தொடர்ந்து நடந்துசெல்கையில் எனது முதுகுப்புறத்தில் சூடுவிழுந்தது. இதனால் முகம்குப்புற விழுந்த நான் நினைவு இழத்தேன்.

காயமடைந்தவரைப் பரிசோதனை செய்த வைத்திய அதிகாரி திரு ஆர். திருநாவுக்கரசுவும் சாட்சியமளித்தார். மேல் விசாரணை இம்மாதம் 29 ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அச்சுவேலியைச் சேர்ந்த எஸ். தவராசா என்பவர் துப்பாக்கியினால் அதே ஊரைச் சேர்ந்த கணபதி தேவராசாவை இவ்வருடம் ஆகஸ்ட் 7-ம் திகதி சுட்டுக் கொலைசெய்ய எத்தனித்ததாக காங்கேசன்துறைப் பொலிஸார் இவ்வழக்கை தொடர்ந்துள்ளனர்.

எதிரி சார்பில் ஆர். ஜே. செல்வரத்தினம்ஆஜரானார்

# ரூ. 75லட்சம் பெறுமதியான புடவைகள் இறக்குமதி

கொம்பனித்தெரு, செவ்வாய் எதிர்வரும் நத்தார் பிறம்மூன் ஆகிய பண்டிகைகளை முன்னிட்டு கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் இம்முறை எழுபத்தி ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான புடவைகள் இறக்குமதிசெய்து இருக்கின்றது

இதில் சீத்தை வகைகள் பிஜாமா வகைகள் முதலியன அடங்கியுள்ளன. சீத்தை இரண்டு ரூபா முதல் இரண்டுரூபா ஐம்பது சதம் வரையிலும் பிஜாமா ஒன்றுக்கு இரண்டு ரூபா விலைப்படியும் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படும் என்றும் சீத்தை வகைகள் வேண்டிய அழகான டிசைன்களில் இருக்கின்றன என்றும் அறியப்படுகின்றது.

மக்களுக்கு வேண்டிய சீத்தை வகைகளும் பிஜாமா வகைகளும் பெருநாட்கொண்டாட்டத்திற்கு தட்டுப்பாடு இன்றி விநியோகிக்கப்படும் என்றும் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## ஆசிரியை தற்கொலை

குடந்தை, நவ. 14 கல்யாணம் செய்து கொள்ள மறுத்ததால், தாயார்கடிந்துகொள்ளவே, ஏதோ விஷம் சாப்பிட்டு அற்புதமேரியென்ற ஆசிரியை, பட்டுக்கோட்டை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அங்கு காலமாகியதாகக் கூறப்படுகிறது.

## விவசாயத்தில் மாணவர்

புலோலி, செவ்வாய் புலோலி புற்றளை மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 50க்கு மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் சிரமதானமுறையில் நெல்வயல்களில் களைபிடுங்கினர்.

∴ ∴ ∴

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்களும், புலோலி ஆண்கள் வேலாயுதம் பள்ளிக்கூட மாணவர்களும் சிரமதான முறையில் குடத்தனை நெல்வயல்களில் களைபிடுங்கினர். 500க்கு மேற்பட்ட இரு பள்ளிக்கூட மாணவர்களும் களைபிடுங்கும் வேலையில் ஈடுபட்டனர்.

### யாழ் மாவட்டத்தில்

## நெற்பயிர்ச் செய்கை நிலம் அதிகரிக்கும்

கொழும்பு, செவ்வாய் யாழ்ப்பாண மாவட்டத்தில் 1967-68 பெரும்போகத்தில் 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கரில் மேலதிகமாக நெல் விளைச்சல் செய்யப்படும் இந்தநிலத்தில் 1966-67-ம் வருட பெரும்போகத்தில் நெல் விளைவிக்கப் படாதிருந்தது இங்குகுறிப்பிடத்தக்கது.

நெல் விளைச்சலுக்கு உகந்த நிலத்திலெல்லாம் இந்த பெரும்போகத்தின் போது நெல்லை விளைவிக்க சகல நடவடிக்கையும் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக உணவு விவசாய அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## இலங்கைக்கு உதவும்

கொழும்பு, செவ்வாய் இலங்கையின் தேசிய அபிவிருத்தித் திட்டத்துக்கு ஐ. நா. விசேஷ நிதி உதவி ஸ்தாபனம் உதவ முன்வந்துள்ளது.

அடுத்தவருட நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படவிருக்கும் இத் திட்டத்துக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இப்பொழுது ஆரம்பமாகியுள்ளதாக இலங்கை அரசாங்கத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவு, விவசாயம், மீன்பிடித்துறை, கைத்தொழில் ஆகிய துறைகளில் இந்த உதவி கிடைக்கும்.

## தட்டுப்பாடு

புலோலி, செவ்வாய் பருத்தித்துறை தபாற்கந்தோரில் எயர்மெயில் கடிதம் எழுதும் காகிதத்தாளுக்கு பெரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி, செவ். பாடசாலை மாணவர்களின் களைபிடுங்கல் விழா இவ்வாரம் தொடர்ந்து நடைபெறுகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் இதர பகுதிப் பாடசாலைகளில் இருந்தும் மாணவர்கள் இவ்விழாவில் கலந்துகொள்கின்றனர். ஒவ்வொரு நாளும் இப்பகுதியில் இருநூற்றுக்குறையாத மாணவர்கள் இப்பெரும்பணியில் பங்குகொள்கின்றனர்.

## நோயாளர் கஷ்டம்

சுழிபுரம், செவ் தொல்புரம் பானுவெட்டி வைத்தியசாலையில் தினமும் இருநூற்றுக்கு மேற்பட்ட நோயாளிகள் மருந்துபெற்றுச்செல்கின்றனர். தொடர்ந்து பெய்துவரும் மழையின் காரணமாக நோயாளிகள் தங்க இவ்வைத்தியசாலையில் போதிய இடவசதிகள் இல்லாததினால் மழையில் நனைந்துகொண்டு நிற்க வேண்டியுள்ளனர். இப்போதுள்ள கட்டிடத்தில் ஐம்பது பேருக்கு மட்டுமே வசதியுண்டு.

## திறந்தவெளி அரங்கு நன்கொடை

முல்லைத்தீவு, செவ். முல்லைத்தீவு முற்றவெளியில் திருமதி யோகம்மா வஸ்தியாம்பிள்ளையினால் 2000ரூபா செலவில் அமைத்திருந்த திறந்தவெளி அரங்கை இன்று முல்லைத்தீவு மகாவித்தியாலய மாணவ மாணவிகளின் நலன் கருதி திரு எம். எஸ். வஸ்தியாம்பிள்ளையும் பாரியா யோகம்மாவும் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்துக்கு கையளித்துள்ளனர்.

## ஷோர்ட்டுகளுக்கு விலைக்கட்டுப்பாடு

கொழும்பு, செவ். உள்ளூரில் தயாரிக்கப்படும் ஷோர்ட்டுகள் விரைவில் விலைக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படவிருக்கிறது. இவற்றின் தரமும் குறையாதபடி கண்காணித்துக்கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

கைத்தொழில் அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் இதுசம்பந்தமாகத் தெரிவிக்கையில், இலங்கையில் தயாராகும் திறமான ஷோர்ட்டை இங்குள்ள பாவனையாளர் 20 ரூபாவுக்கு வாங்கக்கூடிய நிலை இருக்கும்போது 40 ரூபாவுக்கும் விற்பனைசெய்யப்பட்டு வருவதாகத்தெரிவித்தார்.

## அராலி தெற்கு பயிர்ச் செய்கைக்குழு

அராலி, செவ்வாய் அராலி தெற்கு-கிழக்கு பயிர்ச்செய்கைக் குழுவின் மாதாந்தக்கூட்டம் குழுக் காரியாலயத்தில் நடைபெற்றது. கமத்தொழில் பகுதி பெரும்பாக உத்தியோகத்தர் திரு. இரத்தினராசா, கிருஷிப் போதனாசிரியர் திரு. குமாரவேலு, உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் திரு. கனகசபை ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். 1967—68-ம் ஆண்டுக்கான வேலைத்திட்டம் பற்றி பெரும்பாக உத்தியோகத்தர் எடுத்துக்கூறினர்.

இப்பயிர்ச் செய்கைக்குழுவின் செயற்பரப்பில் நடப்பு வருடத்தில் மிளகாய் 15 ஏக்கரிலும், சின்னவெங்காயம் 40 ஏக்கரிலும் செய்கை பண்ண அரசாங்க மேலதிக அதிபர் திட்டமிட்டுள்ளதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

நெற்காணிச் சொந்தக்காரரிடமிருந்து தவணை தப்பிய வரிப்பணத்தை வசூலிக்கும் நடவடிக்கைகளைக் கவனிக்க திரு. வே. விநாயகமூர்த்தி என்பவர் நியமிக்கப்பட்டார்.

## எம்.பி.-நகரசபை மோதல்

மொறட்டுவா, செவ். 'நகரசபையின் ஆணைக்கு நான் கீழ்ப்படிந்து நடக்க முடியாது. நகரசபையின் 6 அங்கத்தவர்கள் கோரிக்கையின் படி நான் எனது எம். பி. பதவியை ராஜினாமா செய்து விட முடியாது'

இவ்வாறு மொரட்டுவா எம். பி. திரு. ரஸ்கின் பெர்ணண்டோ இளைஞர் சங்க மகாநாடொன்றில் தெரிவித்தார்.

தமது தொகுதியின் 30 சதவீதமான பகுதியைமேற்படி 6 அங்கத்தவர்களும் பிரதிநிதித்துவம் செய்கிறார்களெனவும் அவர்களின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்கான எதுவித காரணத்தையும் தம்மால் அறிந்து கொள்ள முடியவில்லையெனவும் திரு. பெர்ணண்டோ எடுத்துக் கூறினர்.

தாம் ஒரு ஜனநாயகவாதியென்றும் இது சம்பந்தமாக மக்கள் தீர்ப்பையே தாம் எதிர் பார்த்திருப்பதாகவும் அவர் மேலும் கூறினர்.

தெகிவளை - மவுண்ட்லவேனியா மாநகர சபைக்கு மொரட்டுவாவின் ஒருபகுதி சேர்க்கப்பட்டது சம்பந்தமாக மொரட்டுவா நகர சபைக்கும் எம். பி. க்கு மிடையே சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

## குழந்தைகள்...

[3ம் பக்கத்தொடர்ச்சி]

### தேசிய மாநாடு

நேற்று மாலை புதுடில்லியில் நேரு மீதான காங்கிரஸ்காரரின் தேசிய மாநாடு ஒன்று நடைபெற்றது. இம்மாநாட்டில், இந்திய துணைப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் பிரதம பேச்சாளராகப் பங்குபற்றினர். இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

## குண்டுவீச்சு...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

புரியாது என அவர் தெரிவித்தார்.

வியட்னாம் மீதான அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸனின் கொள்கை, அமெரிக்க பொதுமக்கள் அபிப்பிராயத்தில், இப்போது மிகத் தாழ்ந்த நிலைக்குச் சென்றுள்ளதாகவும் செனேட்டர் கென்னடி கூறினர்.

## உடுப்பிட்டி கிராமசபை

உடுப்பிட்டி, செவ்வாய் உடுப்பிட்டி கிராம சபையின் வரவு - செலவுக் கூட்டம் அங்கத்தவர்கள் கிளப்பிய பிரச்னையால் ஒத்திப்போடப்பட்டது. சபையின் 1968-ம் ஆண்டுக்குரிய பட்ஜட்டைச் சமர்ப்பிக்க முயன்றபொழுது அங்கத்தவர்கள் பட்ஜட் சம்பந்தமான முழு விபரங்களும் தங்களிடம் முன்னரே வழங்கப்பட்ட பின்னரே சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று கோரியதைத் தொடர்ந்து தலைவர் கூட்டத்தை ஒத்திவைத்தார். எதிர்வரும் 23-ந் திகதிநடைபெறவிருக்கும் கூட்டத்தில் வரவு - செலவு அறிக்கை சமர்ப்பிக்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

5 லட்சம்

## பிள்ளைகளுக்கு கல்வி வசதியில்லை

காலி, செவ்வாய் 'இலங்கையில் இலவசக் கல்வி அளிக்கப்பட்ட போதிலும், பாடசாலைக்குச் செல்லும் வயதடைந்த சுமார் 5 லட்சம் பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லாமலிருக்கின்றனர்' என்று உள்நாட்டு மந்திரிதிரு.டபிள்யு. தகநாயகா இங்கு நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போது கூறினர். சர்வதேச குழந்தைகள் தினத்தையொட்டி இக்கூட்டம் நடைபெற்றது.


"ராணி"

உங்கள் சொகுசுக்கேற்ற

சாமான்கள்

- ஸ்பிரிங் கட்டில் பிரேம்கள், எல்லா அளவிலும்



- டிலக்ஸ் குழாய் ஸ்பிரிங் கட்டில்கள்
- டிலைட் குழாய் ஸ்பிரிங் கட்டில்கள்
- ஆஸ்பத்திரி கட்டில்கள்
- டாக்டர் பரிசோதனை கட்டில்கள்
- ஆஸ்பத்திரி தூங்கு கட்டில்கள்
- பஞ்சு - தும்புமெத்தைகள்
- ஸ்பிரிங் மெத்தைகள்
- குழந்தை தொட்டில்
- மெத்தை ஸ்பிரிங்குகள்
- திரைகள்
- சுப்பர் லக்ஸ் கட்டில்கள்

முதலியன

மேற்கொண்டு விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

ஏகவிநியோகஸ்தர்கள்

த பர்மா டீக் ட்ரேடிங் கம்பனி, லிமிட்டெட்,

62, புளுமெண்டால் ரோட்,

கொழும்பு-13.

தொலைபேசி: 2233/34


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரபந்தாட்டம்

## சிந்தாமணிக்கு வெற்றி

உடுப்பிட்டி, செவ்வாய்

கரவெட்டி மேற்கு சிந்தாமணி விளையாட்டுக் கழகத்திற்கும், கரவெட்டி குருகுலவாலிபர் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் சிந்தாமணி விளையாட்டுக் கோஷ்டியினர் வெற்றியீட்டினர்.

திரு. கே. சிவானந்த மூர்த்தி மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## சமயபாடப் போட்டி

பண்டத்தரிப்பு, செவ்வாய்

யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் சார்பில் ஞானோபதேச நடுநிலையத்தினரால் கத்தோலிக்க சமயபாடப் போட்டி அடுத்த வருடத்திலிருந்து நடைபெறவிருக்கிறது. ஞானோபதேச நடுநிலைய அதிபர் வண. ஜி. ரி. பாலசுந்தரம் சுவாமியார் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

## புலோலி கி. ச. தரம் உயரும்

புலோலி, செவ்.

புலோலி கிராமசபை வெகு விரைவில் பட்டின சபை அந்தஸ்துக்கு தரமுயரத்தப்பட விருக்கிறது.

புலோலிமக்களின்வேண்டுகோளுக் கிணங்கவும் புலோலி கிராம சபையின் வேண்டுகோளுக் கிணங்கவும் கிராமசைபயைபட்டின சபையாக, தரம் உயர்த்தும் நடவடிக்கைகளில் புலோலி கிராம சபையினர் ஈடுபட்டுள்ளார்கள்.

## இடைவழியில் நிற்கும் பஸ்கள்

புலோலி, செவ்.

பருத்தித்துறை-சாவகச்சேரி பஸ்சேவை மிக மோசமாயிருப்பதாயும் இதனால் பிரயாணிகள்பெரிதும்துன்பமடைவதாகவும் கூறப்படுகிறது. இப்பாதையில் ஓடும் பஸ்கள் இடையிடையேபழுதுற்று நின்றுவிடுவதே பிரயாணிகளின் கஷ்டத்திற்குக் காரணம். இவற்றில் கடமையாற்றும் ஊழியரும் சிரமமடைகின்றனர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 15-11-67

[செய்திகள்:-காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00].

344 மீற்றர் & 61 மீற்றர் காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர் பகல் 12-00 தொழிலாளர்வேளை, 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர் மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர்மன்றம்.

இரவு 6-15 கதம்பஇசை, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 பாவளம், 7-30 பாட்டு — அம்பிகா தாமோதரம் & ஞானசிவசுப்பிரமணியம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 உரைச்சித்திரம்.

## மாற்றமில்லை என்றார் பிரதமர்

கொழும்பு, செவ்.

கொழும்பு பல்கலைக்கழகத்தை 'இலங்கைப் பல்கலைக்கழகம், கொழும்பு' என மாற்றும் அதே சமயத்தில் போராதனை பல்கலைக் கழகத்தில் அதேவிதத்தில் 'இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை' யெனமாற்ற பிரதமர் சம்மதிக்காதது குறித்து வைத்தியமாணவர் சங்கம் அதிருப்திகொண்டுள்ளது. 'தமது பல்கலைக்கழகத்துக்கு சமஅந்தஸ்து வழங்குவதாகப் பிரதமர் அளித்திருந்த வாக்குறுதி இதனால் நிறைவேற்றப்படவில்லையென மேற்படி சங்கத்தினர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

பிரதமரை நேற்று இது சம்பந்தமாகச் சந்தித்த வைத்திய மாணவர் சங்கத் தலைவர் திரு. எம். சச்சிதானந்தன் பிரதமருடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததாகத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தை இலங்கைப் பல்கலைக் கழகம் [கொழும்பு] என மாற்றும் முடிவில் எவ்விதமாற்றமுமிருக்காது எனப் பிரதமர் தம்மைச் சந்தித்த பல்கலைக்கழக போதனாசிரியர்கள் சங்கம், வைத்திய போதனாசிரியர்கள், மூலறு மாணவர், சங்கங்கள் ஆகியோரின் தூது கோஷ்டியினரிடம் தெரிவித்திருந்தார்.

## 9 மாதத்தில் வேலை இழந்தவர்கள்

கொழும்பு, செவ்.

கடந்த 9 மாதங்களில் பல துறைகளிலும் கடமையாற்றி வந்த 6 ஆயிரம் தொழிலாளர்கள் தமது வேலைகளை இழந்ததாகத் தெரியவந்துள்ளது.

இவர்களில் அநேகமானவர்கள் தோட்டங்களிலும் தனிப்பட்ட ஸ்தாபனங்களிலும் கடமையாற்றி வந்தவர்கள் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொழில் நுட்ப நிபுணர் பட்டியல்

கொழும்பு, செவ்.

விஞ்ஞான, தொழில்நுட்ப நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் பட்டியல் ஒன்று தயாரிக்கப் படவிருக்கிறது. குடிசன மதிப்பீடு இலாகா இதனைத் தயாரிக்கும்.

நாட்டின் தேவைக்கேற்ப இவர்களது திறன் பயன்படுத்தப் படுகிறதா என்பதைக் கணிப்பெடுக்கவே இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட விருக்கிறது.

அரசாங்கத்திலும், கார்ப்பரேசன்களிலும், தனியார் துறைகளிலும் கடமையாற்றும் விஞ்ஞான, தொழில் நுட்ப நிபுணர்களைக் கொண்ட பட்டியலே தயாரிக்கப்பட விருக்கிறது.

## மண்பாதுகாப்பு வாரக் கூட்டம்

சங்கானை, செவ்வாய்

கமத்தொழில் பகுதியினரால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய மண்பாதுகாப்பு வாரக்கூட்டம் பெரியவிளானில் திரு. எஸ். ஜெகநாதன் தலைமையில் நடைபெற்றது.

பெரியவிளான் பயிர்ச்செய்கைக்குழு அங்கத்தவர்கள், பொதுமக்கள், கிராம சேவையாளர் திரு. வேதநாயகம், ப.நோ.கூ. சங்கத் தலைவர் உட்பட பலர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். விவசாய போதனாசிரியர் திரு.ரி. குமாரவேல் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டார்,

அம்பிளியவத்தை என்னும் வயலில் உள்ள வாய்க்கால் சிரமதானமூலம் திருத்தியமைப்பதென்று பெரியவிளான் பயிர்ச் செய்கைக் குழுவினரினால் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

## வவனியாவில் கூடி ஆலோசிப்பர்

சங்கானை, செவ்வாய்

வடமாகாண விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களின் நிர்வாகசபைக் கூட்டம் இம்மாதம் 16ம் திகதிவடமாகாண விவசாய விஸ்தரிப்புத் தலைவர் திரு. மு. கணபதிப்பிள்ளை, தலைமையில் வவனியாவில் நடைபெற விருப்பதாகவும், இக்கூட்டத்தில் தமது சேவையின் மூலம் பொதுமக்கள் தற்பொழுது பெறும் பலனை அதிகரிக்கச் செய்தல் உட்படப்பல முக்கிய விஷயங்கள் ஆராயப்படுமென்றும் தெரியவருகிறது.

## கூட்டுறவுஇயக்கம்

காலி, செவ்வாய்

கூட்டுறவு இயக்கம் இந்நாட்டில் தோன்றி 50 வருடத்தை கடந்திருந்த போதிலும், மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நம் நாடு பின்தங்கியுள்ளது என்று கூட்டுறவு அபிவிருத்தி உதவிக் கமிஷனர் திரு.ஏச். எம். அபயபாலா கூறினார்.

## ஓவசியருக்கு அபராதம்

காலி, செவ்.

ஹிக்கடுவையை சேர்ந்த ஓவசியர் எம். சுப்பிரமணியத்திற்கு காலி மாஜிஸ்திரேட் திரு.கொலின்ஈ.மெண்டிஸ் 500 ரூபா அபராதம் விதித்தார். அபராதம் கட்டத் தவறினால் 6வார கடுழிய சிறைத்தண்டனை என்றும் தீர்ப்பளித்தார்.

தொழிலாளியான ஏ. ஜி. ரி. பண்டித என்பவருக்கு, 124 ரூபாநஷ்ட ஈடு வழங்கவில்லையென சுப்பிரமணியம் மீது உதவித் தொழில் கமிஷனர் திரு. அல்வீஸ், வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

## திட்டங்களைக் காணவில்லை

காலி, செவ்.

கடந்த சில வருடங்களாக பல அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி கேள்விப்பட்டோம். ஆனால் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பார்த்தபோது எந்த விதமான திட்டங்களையும் பார்க்க முடியவில்லை.

முன்னாள் பிரதம நீதியரசர் திரு. ஹேமபசநாயக்கா மடவலமுல்லை ஆலயத்தில் நடந்த கூட்டத்தில் பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

## கிளிநொச்சி பஸ் சேவை

கிளிநொச்சி, செவ்வாய்

கிளிநொச்சிப் பகுதிப்பஸ் சேவையைச் செம்மைப்படுத்துவதற்காகஇ.போ.ச. பிரதேச முகாமையாளரினதும் அவரின் உதவியாளர்களினதும் கூட்டமொன்று பாராளுமன்ற உறுப்பினரால் கூட்டுவிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் நேர அட்டவணை ஒழுங்குகள் சீரில்லையெனவும், நேரத்தில் உரிய பஸ்ஓடுவதில்லை எனவும் பிரயாணிகள் சங்கப் பிரதிநிதிகள் எடுத்துக் கூறினர்.

சனிக்கிழமையில் மக்கள் படும் பிரயாணக்கஷ்டத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் இருந்து அன்றைய தினம் ஒரு மேலதிகபஸ்ஸை அனுப்பவேண்டுமென எம். பி. கேட்டுக் கொண்டார்.

# செய்தித் திரட்டு

### தேயிலை

இவ்வருடம் முடிவடைவதற்குமுன்னர் இலங்கையிடமிருந்து மேலதிகமாக ஐந்து லட்சம்ருத்தல் தேயிலைவாங்குவதற்கு ஈராக் உடன்பட்டுள்ளது. இலங்கையும் ஈராக்கிடமிருந்து ஒரு லட்சத்து முப்பதினாயிரம்ரூபாய்க்கு பாக்கட்டில் அடைக்கப்பட்ட பேரீச்சம்பழம் வாங்குவதற்கு உடன்பட்டுள்ளது.

∴ ∴ ∴

### ரப்பர்

ரப்பரின் விலையைக்கூட்டி நடவடிக்கை மூலம் ஸ்திரப்படுத்துவதற்கான முயற்சிகளைமேற்கொள்ளுவதற்காக மலேஷியப் பிரதமர் துங்கு அப்துல்ரஹ்மான் கூட்டியுள்ள ரப்பர் உற்பத்தியாளர் மகாநாட்டில் இலங்கை தூதுகோஷ்டி வர்த்தக அமைச்சர் டாக்டர் எம்.வி.பி.பீரிஸ் தலைமையில்கலந்து கொள்ளும்,

∴ ∴ ∴

### மூடப்படாது

மட்டக்களப்பு கூ.மொ.வி நிலையம் மூடப்படமாட்டாது. ராஜாங்க அமைச்சரை மட்டக்களப்பு எம்.பி.க்களான திரு.செ.இராசதுரையும் ஜனாப் லத்தீப் சின்னலெப்பையும் சந்தித்துக் கேட்டுக்கொண்டதன் பேரில் மூடப்படவிருந்த கூ.மொ.வி. நிலையம் தொடர்ந்து நடைபெற உத்தரவிடப்பட்டது.

∴ ∴

### திரு. தொண்டமான்

இ.தொ.கா. தலைவர் திரு. எஸ்.தொண்டமான், ஜெனிவாவில் நடைபெறும் சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின்170-வது நிர்வாகசபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகப் பிரயாணமானார்.

∴ ∴ ∴

### ஒருகோடி ரூபாய்

மேலதிகமாக பாலுணவுப் பொருட்களை அவசரமாக இறக்குமதி செய்வதற்காக மேற்கொண்டு ஒருகோடி ரூபாய் அந்நியச்செலாவணி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

∴ ∴ ∴

### நெல் கொள்வனவு

உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் தற்போதைய பெரும்போக வேளாண்மையின்போது கூடுதல்நெல் கொள்வனவு செய்யஉணவு, விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. விவசாயயிகளுக்கு ஸ்தலத்தில் வைத்தே ரொக்கப்பணம் செலுத்தவும் நெல்கொள்வனவைச் செய்யும் .கூட்டுறவுச்சங்கங்களுக்கு வழங்கப்படுமாம்.

∴ ∴ ∴

### சிறுபான்மையினர் ஒத்துழைப்பு

எந்த ஒரு கட்சிஇந்நாட்டில் ஆட்சிபீடம் ஏறினாலும் அது சிறுபான்மை மக்களின் ஒத்துழைப்பின்றியும், பூரண ஆதரவு இன்றியும் இந்நாட்டை ஆளமுடியாதென கம்பஹா எம்.பி.யும் சுதந்திரக்கட்சி உறுப்பினருமாகிய திரு.எஸ்.டி. பண்டாரநாயகா, இரத்தினபுரி மாநகரசபை மண்டபத்தில்நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போது கூறினார்.

1956-ம்ஆண்டு காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயகா கூட்டாட்சிக்குவந்ததும் சிறுபான்மை இனத்தவரின் தலைவர்களான தமிழரசுக்கட்சியினருடன் ஒப்பந்தம் செய்து கொண்டதற்குக் காரணம், சிறுபான்மையினரின் உரிமை பாதுகாப்பதற்காகவே என்றும் அவர் மேலும் கூறினார்.

### குளோரின் குழாய் வெடித்தது

பரந்தன் இரசாயன தொழிற்சாலையில் முக்கிய உப உறுப்புதிடீரென வெடித்து. இதனால் மேற்படி தொழிற்சாலையில்குளோரின் உற்பத்தி தடைப்பட்டது. குளோறின் உற்பத்தியோடு சம்பந்தமுடைய இந்த முக்கிய பைப் வெடித்தது மூலம் சுமார் 25யாயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாம், அதுமட்டுமன்றி குளோறின் உற்பத்திதடைபட்டிருப்பதால் தினசரி 6 ஆயிரம் ரூபா நஷ்டம் ஏற்படுமெனவும், மதிப்பிடப்படுகிறது.

∴ ∴ ∴

### மோசடி

பொகவந்தலாவ பகுதியில்இருந்துஇந்தியாதிரும்புவோர்தொகைஅதிகரித்துள்ளதால் இச்சந்தர்ப்பத்தை பயன் படுத்தி அவர்களிடம் பணம் சுறக்க பல கோஷ்டிகள் கிளம்பியுள்ளன. இந்தியா செல்வதற்கான பத்திரத்தை நிரப்பிக் கொடுக்க 50 ரூபா வேண்டுமென்று பேரம் பேசி பணம் வாங்குகிறார்களாம். இம்மோசடியில் பல தொழிற்சங்க வாதிகளும் ஈடுபட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

∴ ∴ ∴

### ரூபா 20,000 கேட்டாராம்

போலி மாணிக்கக்கல் ஒன்றைக் காட்டி 20,000 ரூபா கேட்டாராம் ஒருவர். காசு கேட்ட நபர் கத்தியுடன் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். இச்சம்பவம் பதுளையில் நடந்துள்ளது. பல வருடங்களாக போலிக் கற்களை விற்று பொதுமக்களை ஏமாற்றி வந்ததாகக் கூறப்படும் இந்த நபரை கான்ஸ்டபிள் ஆரிய சேனா கைது செய்தார்.

∴ ∴ ∴

### கஞ்சாமூடை

சட்டவிரோதமாக கஞ்சா மூடை ஒன்றையும் எருமை இறைச்சி மூடை ஒன்றையும் வைத்திருந்த ஒருவரை நேற்று மையங்கணை பொலிசார் கைது செய்தனர். இவரிடமிருந்து லைசென்ஸ் இல்லாத துப்பாக்கியொன்றையும் பொலிசார் பறிமுதல் செய்தனர். ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த மேற்படி நபரை ஒரு வேடுவர் சென்று பிணையில் விடுமாறு கோரினர்.

## வெள்ளைப் புகையிலை நாற்று

பண்டத்தரிப்பு, செவ்.

வெள்ளைப் புகையிலை பயிரிடுவதற்கானநாற்றுமேடைகள் தயாரிப்பதில் புகையிலைச் சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. கடந்த போகங்கள் போன்று இப்போகத்திலும் அதிகமாக வெள்ளை புகையிலை பயிரிடப்பட விருக்கிறது.

## நெல் விளைச்சலுக்கு புதிய திட்டங்கள்

குருநாகலை, செவ்.

அடுத்தபெரும்போகத்தில் குருநாகலைப் பகுதியில் நெல் விளைச்சலை மேலும் அதிகரிக்கச் செய்வதற்காக இரு புதிய திட்டங்கள் இங்கு செயல்பட விருக்கின்றன.

குருநாகலை அரசாங்க அதிபர் திரு. டி. எம். யி. பி. தஸநாயகா தலைமைத் திட்டக் கமிட்டி இவ்வித தீர்மானம் செய்துள்ளது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்கள் மீண்டும் பகிஷ்கரிப்பு

கொழும்பு, நவ. 13

கொழும்பு பல்கலைக்கழகத்தின் வைத்திய-விஞ்ஞானப்பிரிவு மாணவர்கள் மீண்டும் பகிஷ்கார இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறார்கள்.

பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குச் சம அந்தஸ்துத் தருவதாகப் பிரதம மந்திரி கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டார் என்று மாணவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். எந்த முடிவும் எடுப்பதற்கு முன் சம்பந்தப்பட்டவர்களோரையம் கலந்தாலோசிப்பதாகப் பிரதம மந்திரி முன்பு கூறினாரென்றும் ஆனால் அப்படி அவர் எதுவும் செய்யவில்லையென்றும் குறை கூறியுள்ளனர்.

பெயர் மாற்றஞ்செய்ய மட்டுமே பிரதமர் முடிவு செய்திருப்பதாகவும் கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு நிதி மற்றும் விஷயங்களில் பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் சம அந்தஸ்து வழங்கத் தீர்மானிக்கவில்லையென்றும் கூறப்படுகின்றது.

இதற்கிடையில் வித்தியாலங்கார பல்கலைக்கழக மாணவர்களும் பெயர் மாற்றம் கோரி வகுப்புகளைப் பகிஷ்காரஞ்செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்.

வித்தியோதயப் பல்கலைக்கழக மாணவர்கள் பெயர் மாற்றம் கோரி பகிஷ்கரிப்பு இயக்கம் நடத்த முடிவு செய்திருக்கிறார்கள்.

# நேரு வாக்குறுதியை நிறைவேற்றும் மசோதா

## இந்திய மந்திரிசபை அங்கீகாரம்

புதுடில்லி, நவ. 13

இந்தி பேசாத மக்கள் வாழும் ராஜ்யங்களில்உள்ள மக்களுக்கு காலஞ்சென்ற பாரதப் பிரதமர் நேருஜி கொடுத்துள்ள வாக்குறுதியின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள ஆட்சி மொழி மசோதாவை இந்திய மந்திரிசபை ஒப்புக் கொண்டுள்ளது.

லோக்சபையின் தற்போதைய கூட்டத் தொடரில் இந்த மசோதா நிறைவேற்றப்படும். இந்தியை அம்மொழி பேசாத மக்கள் வாழும் ராஜ்யங்கள் ஏற்றுக் கொள்ளும்வரை ஆங்கிலம் துணை ஆட்சி மொழியாக நீடிப்பதற்கு இந்த மசோதா வழிசெய்யும்.

# 'ஏற்றத் தாழ்வுகளை சிரமதானம் போக்கும்'

## பாடசாலை அதிபர் பேச்சு

உடுப்பிட்டி, திங்.

"சிரமதானம் இன்றைய சூழ்நிலையில் சமூக ஏற்றத் தாழ்வுகளைப் போக்கும் ஒரு சாதனமாகவும் மாணவர்களிடையே சேவை மனப்பான்மையை வளர்க்கும் இயக்கமாகவும் விளங்கிவருகின்றது. இதனாலேயே இவ்வியக்கம் உலகம் முழுவதிலும் துரிதமாகப் பரவிவந்துள்ளது. அரசாங்க உத்தியோகம் சோம்பலையே வளர்க்கும். பாடுபட்டு உழைப்பதே வாழ்க்கையின் குறிக்கோளாகும். வயலிலே நாள் முழுவதும் வியர்வை சிந்தி உழைக்கும் விவசாயியுடைய தைரியமும் நம்பிக்கையும் தான் நாட்டின் அச்சாணிகள். ஆதலினால் எமது இளம் சமுதாயம் கல்வியறிவுடன் விவசாய அறிவும் பெறவேண்டியது அவசியமாகும்."

இவ்வாறு கரணவாய் தெற்கு சோளங்கன் மகா வித்தியாலய அதிபர் திரு. ஸி. தர்மலிங்கம், வல்லை நெல் வயல்களில் களைபிடுங்குதலில் ஈடுபட்ட மாணவ மாணவிகள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

ஆசிரியர்கள் திருவாளர்கள் கே. எஸ். குலசிங்கம், கணேசமூர்த்தி, பொன்னம்பலம். ஆசிரியை திருமதி பார்வதி ஆகியோரும் மாணவ, மாணவிகளுடன் சேர்ந்து களைபிடுங்கினர்.

## ஆசிய அபிவிருத்தி வங்கி

### அடுத்தஆண்டில் கடன் வழங்கும்

டோக்கியோ. நவ. 13

கடந்தவருடம் ஆரம்பிக்கப்பட்ட ஆசிய அபிவிருத்தி வங்கி அடுத்த ஆண்டில் தனது முதலாவது கடனை வழங்கும். இந்த வங்கியில் இப்பொழுது 20 கோடி அமெரிக்க டாலர் நிதியாக விருக்கின்றது.

## பெண் விடுதலை

### மோசடி வழக்கில்

குரும்பசிட்டி, திங்கள்

இவ்வருடம் ஆடி மாதம் 3-ந் தேதி மாவிட்டபுரம் வாசி திருமதி கண்மணி தியாகராசா என்ற பெண்மணியிடமிருந்து சுமார் 1150 ரூபா பெறுமதி வாய்ந்த தங்கநகைகளை ஏமாற்றி மோசடி செய்ததாக காங்கேசன்துறையைச் சேர்ந்த பெண்மணி மேபிள் செபஸ்ரியான் என்பவருக்கு எதிராக காங்கேசன்துறைப் பொலிசார் தொடர்ந்திருந்த வழக்கில் மல்லாகம் நீதிபதி திரு. ரி. எஸ்- நெத்தசிங்கா எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார். எதிரிதரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் திரு. சிவ ஸ்ரீதரனின் உதவியுடன் ஆஜராகியிருந்தார். பொலிஸ் தரப்பில் தலைமைக் காரியாலயஇன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தி வழக்கை நடாத்தினார்.

இந்தியாவில்

## 4 புதிய துணைமந்திரிகள்

புதுடில்லி. நவ. 13

இந்திய மந்திரி சபையில் மேலும் 4 துணை மந்திரிகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இன்று இத்தகவல் வெளியிடப்பட்டது.

## 'நுண்தொழில் இளைஞன்'

உடுவில், திங்கள்

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்ப பாடசாலை மாணவ மன்றத்தினால் வருடம் தோறும் வெளியிடப்பட்டுவரும் 'நுண்தொழில் இளைஞன்' சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை மாலை மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

கிளிநொச்சி எம்.பி. பண்டிதர் கா.பொ. இரத்தினம் சஞ்சிகையை வெளியிட்டு உரை நிகழ்த்துவார்.

## செக்.எழுத்தாளர் யாழ். வருவார்

குரும்பசிட்டி, திங்கள்

இலங்கை மகாஜன கலா மண்டலயாவின் அழைப்பின்பேரில் இலங்கை வந்துள்ள செக்கோஸ்லேவிய நாவலாசிரியரும் சிறுகதை எழுத்தாளருமான திரு. அனோஸ் வஸ்ரிக் யாழ்ப்பாணத்திற்கும் விஜயஞ்செய்வாரென அறியப்படுகிறது. இவர், யாழ்ப்பாண நகரில் உள்ள கலாசார சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிடுவார்.

## 'புரட்சியை கொண்டாட தகுதியில்லை'

உடுப்பிட்டி, திங்.

"மாபெரும் மேதைலெனினால் நிறுவப்பட்ட முதலாவது சோஷலிஸ நாடாகிய சோவியத் நாட்டில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையை அகற்றி மீண்டும் முதலாளித்துவத்தை நிறுவ முயற்சிக்கிறது அற்போதைய சோவியத் திரிபுவாத ஆளுங்கட்சி கும்பலுக்கு மகத்தான அக்டோபர்புரட்சியைக் கொண்டாட எவ்வித உரிமையோ தகுதியோ கிடையாது" என்று நெல்லியடியில் நடைபெற்ற அக்டோபர் 50-வது புரட்சி தினவிழாவில் பேசுகையில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் பிரதேச செயலாளர் திரு. வீ. ஏ. கந்தசாமி குறிப்பிட்டார். இலங்கை வாலிபர் சங்கத்தின் உபசெயலாளர் திரு. கரவை கந்தசாமியும் பேசினார்.

# 'தர்மப் பணத்தை உயர்த்துங்கள்'

## பட்டிருப்பு எம். பி. கேட்கிறார்

களுவாஞ்சிக்குடி, செவ்

வாழ்க்கைச் செலவு உயர்திருக்கும் இவ்வேளையில் தர்மப்பணம் பெறுவோர் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர். இந்த நிலையை அரசாங்கம் உணர்ந்து இவர்களுக்குரிய படியை உயர்த்திக கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பட்டிருப்பு எம். பி. திரு. எஸ் எம். இராசமாணிக்கம் கோரியுள்ளார்.

அரசாங்க ஊழியருக்கும் கூட்டு ஸ்தாபன ஊழியருக்கும் சம்பள உயர்வு கொடுக்கப்படும் இந்நேரத்தில் தர்மப்பணம் பெறுபவர்களின் படி பற்றியும் பரிசீலனை செய்து உயர்த்துவது மிக அவசியம் என்னத் தெரிவித்துள்ள எம். பி. ஐந்து ரூபாவுடன் ஒரு மாதத்தை எவ்விதம் ஒருவர் கழிக்க முடியும் எனக் கேட்டுள்ளார்.

இது சம்பந்தமாக உடனடியான நடவடிக்கை எடுக்குமாறு சமூக சேவை அமைச்சரை பட்டிருப்பு எம். பி. கேட்டுள்ளார்.

## ஊழியருக்கு சம்பளம் வழங்காதவருக்கு 6 மாதசிறை

காலி, செவ்வாய்

காலியிலுள்ள தியேட்டர் சொந்தக்காரர் ஒருவர் அதில் கடமையாற்றி வந்த ஊழியர் ஒருவருக்குச் சேர்மதியான 1470 ரூபாவைச் செலுத்தத் தவறியதற்காக காலி மாஜிஸ்டிரேட் திரு. கொலின் மெண்டிஸ் அவருக்கு 6 மாதக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

'தொழில் கோர்ட்டின் உத்தரவை எதிரி உதாசீனப்படுத்தியுள்ளார். என்றும் இவரைப் போன்றவர்களுக்குகடுமையானதண்டனை வழங்கப்படவேண்டுமெனவும் மாஜிஸ்டிரேட் தீர்ப்பு வழங்குகையில் குறிப்பிட்டார்.

காலி உதவி தொழில் கமிஷனர் திரு. எம். ஜி. எச். டி. அல்விஸ் இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தார். ஜெ. ஏ, நந்தசேனா என்ற ஊழியருக்குச் சேர்மதியான 1470 ரூபாவை மேற்படி தியேட்டர் சொந்தக்காரர் செலுத்தத் தவறியதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

உரிய பணத்தை நந்தசேனாவுக்கு 14 நாட்களுக்கு செலுத்தும்படியும் இல்லாவிடில் வாரண்ட் மூலம் வசூலிக்கப்படுமெனவும் மாஜிஸ்டிரேட் கட்டளையிட்டார்.

தொழில் கோர்ட்டின் உத்தரவுப்படி நந்தசேனாவை மீண்டும் வேலைக்கு அமர்த்தாத மறுரு காரணத்துக்காக குறிப்பிட்ட தியேட்டரின் சொந்தக்காரருக்கு 500 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

## புத்தளத்தில் வங்கிக் கிளை

புத்தளம் செவ்வாய்

புத்தளம் கச்சேரி ரோட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக் கிளை இம்மாதம் 20-ம் திகதி திறக்கப்பட விருப்பதாகத் தெரிகிறது. கட்டிட வேலைகள் முடிவடைந்து தளபாடங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

## ருத்திராபிஷேகம்

அனுராதபுரம், செவ்.

அனுராதபுரம் புதியநகர் வன்னியன்குளம் ஆஸ்பத்திரிச் சந்தியில் புராதனகாலம் தொடக்கமாக இருந்து வரும் ஸ்ரீகணபதி ஆலயத்தில் சென்ற சனிக்கிழமை மாலை 6 மணிதொடக்கம் இரவு 10 மணிவரை ஆஸ்பத்திரி ஊழியர்கள் எல்லாரினது உபயமாக ருத்திராபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

## இடமாற்றம்

முல்லைத்தீவு, செவ்.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பெரும்பாக விவசாய உத்தியோகத்தராகவும், சிலகாலம் முல்லைத்தீவு ப. நோ. கூ. சமாஜத்தின் கௌரவ காரியதரிசியாகவும் கடமையாற்றியவருமான திரு. சு. சிவகுரு ஜனவரி முதல் களுவாஞ்சிக்குடி பெரும்பாக விவசாய உத்தியோகத்தராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

சுழிபுரம், செவ்.

இயங்காவில் ஆஸ்பத்திரியில் அப்போதிக்கரியாகக் கடமையாற்றி வரும் கந்தப்பு நடராசா அடுத்த மாதம் 15-ம் திகதி தொடக்கம் சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

புன்னாலைக்கட்டுவன், செவ்.

அநுராதபுரம் தபாற் கந்தோர் அதிபராகக் கடமையாற்றும் திரு. பி. சந்தியாப்பிள்ளை அடுத்த ஜனவரி முதலாந் திகதி தொடக்கம் கரவெட்டி தபாற்கந்தோர் அதிபராகக்கடமையேற்பர்.

கோப்பாய், செவ்.

கோப்பாய் நாவலர் பாடசாலையில் தலைமைஆசிரியராகக் கடமையாற்றும் திரு. மு. வேலாயுதபிள்ளை அடுத்து வரும் டிசம்பர் மாதத்துடன் பதவியினின்று இளைப்பாறுகிறார். இவர் கடந்த30 ஆண்டு காலமாக இப்பாடசாலையின் ஆசிரியராகவும் பின்னர் தலைமையாசிரியராகவும் சேவையாற்றியுள்ளார்.

## மரண அறிவித்தல்

### ஆறுமுகசாமி

தொல்புரம் வாசியும் காரைநகர் இந்துக்கல்லூரி ஆசிரியருமாகிய பொன்னையா ஆறுமுகசாமி 14-11-67 செவ்வாய்க் கிழமை காலமானார். இவர் மட்டக்களப்பு புகையிரத நிலையத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி, சிங்கப்பூர் இளைப்பாறிய கல்வி அதிகாரி இரத்தினசபாபதி, கோல டிரங்காணு மலேஷியா கல்வி இலாகாவைச் சேர்ந்த பாலசிங்கம், திருமதி பேரம்பலம், திருமதி விஞ்சித்தம்பி, திருமதி ஏரம்பமூர்த்தி, திருமதி தியாகராசா ஜெரேமியா ஆகியோரின் சகோதரராவார். 15-11-67 புதன் கிழமை காலை 10-00 மணியளவில் அன்னாரின் பூதவுடல் தொல்புரம் கலைமகள் வாசத்திலிருந்து மூளாய் மயானத்திற்கு தகனஞ்செய்வதற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல் கொடுப்பவர் பொ சின்னத்தம்பி. 329

இப்பத்திரிகை 'சமநாடு' லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி [illegible] அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு நவம்பர் மாதம் 15-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org